வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 03 10.09.2022 சனிக்கிழமை இதழ் : 275 பக்கங்கள் : 16





வரலாற்றுப் புகழ்மிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ இடம்பெற்றவேளை...!

# 70 பவுண் நகைகள் சந்நிதியில் ‘அபேஸ்’

வடமராட்சி, செப். 10

வரலாற்று பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்த் திருவிழா நேற்று நடந்தது. இதில், பங்கேற்ற பக்தர்களின் சுமார் 70 பவுண் நகைகள் களவாடப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தங்க நகைகளைப் பறிகொடுத்த 18 பேர் ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளை செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தேர்த் திருவிழாவுக்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடிய நிலையில் திருடர்கள் தங்கள் கைவரிசையை காட்டியுள்ளனர்.

இதேவேளை, இன்றைய தினம் தீர்தத் திருவிழா நடைபெறவுள்ளது. இதிலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் பங்கேற்பர். எனவே, கோயிலுக்கு வரும் அடியவர்கள் நகைகள் மற்றும் பணம் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ஐ-3-2)

# எதிர்காலத்தில் கட்டுக்கோப்புடன் கூட்டமைப்பு செயல்பட வேண்டும்!

## தமிழ் அரசு தலைமைக்கு ரெலோ கடிதம்

மட்டக்களப்பு, செப்ரெம்பர் 10

**தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எதிர்காலத்தில் கட்டுப்பாட்டுடனும் சரியான நிர்வாக அமைப்புடனும் செயல்படுவது அவசியம் என்று வலியுறுத்தி பங்காளிக் கட்சியான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) பிரதான கட்சியான இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.**

அத்துடன், வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளர் தெரிவு விடயத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவை ரெலோவின் பொதுச் செயலாளர் கோ. கருணாகரம் (ஜனா) வலியுத்தியுள்ளார்.

தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டதாகக் கூறப்படும் அந்தக் கடிதத்தில், “வல்வெட்டித்துறை நகர சபையில் கடந்த முறை நகர சபையில் தமி 15

# அதிவேகத்தால் இளைஞர் பலி!

யாழ்ப்பாணம், செப். 10

அதிவேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் மரத்துடன் மோதியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு 9.40 மணியளவில் பலாலி வீதி, கந்தர்மடம் பகுதியில் இடம்பெற்றது. இதில், கொக்குவிலை சேர்ந்த கிருஷ்ணகுமார் சரவணபவன் (வயது 32) என்பவரே உயிரிழந்தார்.

இளைஞர், யாழ்ப்பாணம் நகரத்திலிருந்து திருநெல்வேலிக்கு சென்று கொண்டிருந்துள்ளார். அதிவேகத்தால் வீதியை விட்டு விலகிய மோட்டார் சைக்கிள் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. மோட்டார் சைக்கிளை செலுத்திய இளைஞர் மயக்கமுற்ற நிலையில், அவர் உடனடியாக 15

# 19ஆம் திகதி துக்கதினம்!

கொழும்பு, செப். 10

பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத் காலமானதையடுத்து எதிர்வரும் 19ஆம் திகதி தேசிய துக்க தினமாக அறிவிக்குமாறு பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்துடன், அன்றைய தினம் வரை அனைத்துப் பொதுக் கட்டடங்களிலும் தேசியக் கொடியை அரைக் கம்பத்தில் பறக்கவிடுமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார்.

பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத் நேற்று முன்தினம் காலமானார். 26ஆவது வயதில் பிரித்தானியாவின் 15

# யாழிலிருந்து அம்பாந்தோட்டை வரை இன்று காலை தொடங்குகிறது பேரணி!

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை எதிர்த்து

யாழ்ப்பாணம், செப். 10

யாழ்ப்பாணத்தில் தொடங்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிரான பேரணி இலங்கையின் அனைத்து மாவட்டங்களையும் சென்றடையும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலை 15

# அமெரிக்கா பறந்தார் பஸில்!

கொழும்பு, செப். 10

முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்றுக் காலை அமெரிக்கா பயணமானார்.

கடும் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்ட 15

# நட்புறவில் மாறுதல்கள் ஏற்படாதமை மகிழ்ச்சி!

## கிழக்கு பயணத்தில் சீன தூதர்




மட்டக்களப்பு, செப். 10

இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் கடந்த மூன்று மாதங்களில் பல்வேறு முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால், சீனா - இலங்கை இடையிலான பாரம்பரிய நட்புறவிலும் அபிவிருத்தி தொடர்பான பரஸ்பர அக்கறையிலும் எந்த மாற்றங்களும் ஏற்படாதமை குறித்து நாம் மகிழ்ச்சி 15

**லங்கா ஐ. ஓ. சி. ஒப்பந்த வழக்கு:**

# கோட்டாபயவின் பெயர் பிரதிவாதியாக சேர்ப்பு!

கொழும்பு, செப். 10

திருகோணமலை எண்ணெய் தாங்கிப் பண்ணை ஒப்பந்தத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்கள் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பிரதிவாதியாக குறிப்பிடுவதற்கு உயர்நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது. 15

# திருமலையை பாதுகாப்பதற்கு சம்பந்தன் வழிவிட வேண்டும்!

## தமிழ்த் தேசியக் கட்சி வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 10

திருகோணமலையை சிங்கள பேரினவாதிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் குரல் எழுப்ப முடியாத நிலை காணப்படுகிறது. எனவே, இரா. சம்பந்தன் பதவி விலகி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் உள்ள ஒருவருக்கு வழிவிட வேண் 15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

பொல்லைக் கொடுத்து அடிவாங்குவது என்று சொல்வார்கள். இராசமாணிக்கம் சாணக்கிய அப்படித்தான் பொல்லைக் கொடுத்து அடி வாங்கியிருக்கிறார். அடி என்றால் பலமான அடி.

சில நாட்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் நடைபெற்ற பிள்ளையான் கட்சியின் வருடாந்த மாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார் நாமல் ராஜபக்ஷ. அந்த மாநாட்டில் அவர் கலந்துகொண்டமையை வழக்கம்போல சாணக்கிய பாராளுமன்றத்தில் வாங்குவாங்கொன்று வாங்கினார்.

பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மட்டக்களப்பு மாவட்டத்துக்கு சாபக்கேடு என்று கூறிய சாணக்கிய, “தனது சொந்த மாவட்டத்துக்கு செல்ல முடியாத நிலையில் நாமல் ராஜபக்ஷ உள்ளார். அவ்வாறிருக்கையில், நாமல் ராஜபக்ஷவை மேடையில் ஏற்றி மட்டக்களப்பு மாவட்ட மக்களைத் தரம் குறைத்துள்ள சந்திரகாந்தனை சபையில் வன்மையாகக் கண்டிக்கின்றேன்”, என்றார்.

அவரின் பெயரை சாணக்கிய என்று எழுதுவதை பலரும் என் மீது குறைபட்டுக் கொள்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை ஒருவர் பெயரை சரியாக எழுதவேண்டும் என்று நினைப்பவன். அதனால்தான் அவரின் கடவுச்சீட்டில் இருப்பதுபோலவே பெயரை எழுதுகின்றேன்.

பிள்ளையான் பற்றி கதைப்பதற்கு சாணக்கியவுக்கு அருகதை இல்லை என்று இந்தப் பத்தியில் நாம் வாதிடப் போவதில்லை. அதற்கான தகுதி மற்ற எல்லோரையும்விட அவருக்குத்தான் அதிகம் உண்டு. ஏனெனில், அவருடன் கூடவே நீண்டகாலம் அரசியல் பயணம் செய்தவர் அவர். கூடவே இருந்து அவரைப் பார்த்தவர். ஆனால், அவர் மட்டக்களப்புக்கே சாபக்கேடு என்றால் அவருக்கு வாக்களித்த மக்களையும் சேர்த்துத்தான் அவர் இப்படிச் சொல்கிறார் என்பதால், அதனை மட்டக்களப்பு மக்களின் முடிவுக்கே விட்டுவிடுவோம்.

ஆனால், அவர் ஏன் நாமலிடம் பொல்லைக் கொடுத்தார் என்பது தெரியவில்லை.

நாமல் தனது சொந்தத் தொகுதிக்கே போகமுடியாதவர் என்று இவர் சொல்லப்போய், பதிலுக்கு நாமல் கேட்டிருப்பது, நிச்சயம் சாணக்கியவால் தாங்கிக் கொள்ளமுடியாதவை.

சில வாரங்களுக்கு முதல் அவரை மேடையில் வைத்துக் கொண்டே, சுமந்திரன் கூறினார், மகிந்த தரப்புடன் இப்போதும் சாணக்கிய தொடர்பில் இருக்கிறார் எனவும் அடிக்கடி அவர்களைச் சந்திக்கிறார் என்றும்.

அவர் ஏன் அப்படிக் கூறினார் என்பது தெரியவில்லை. அப்படி அவர் சந்திப்பதைத் தெரிந்து வைத்திருந்தாலும், அது அவரின் அரசியல் பயணத்துக்கு நல்லது அல்ல என்பதை சுமந்திரன் அறியாதவர் அல்ல. ஆனாலும் ஏன் அப்படிக் கூறினார் என்பது அப்போது புரிந்திருக்கவில்லை.

இப்போது அதேபோல நாமலும் அவர் அடிக்கடி அலரி மாளிகையில் தேநீர் அருந்துவதாகத் தெரிவித்திருக்கிறார்.

ஆனால், அவர் கூறியிருப்பது, தன்னைப்பற்றி தான் இல்லாத நேரத்தில் பாராளுமன்றத்தில் பேசியதற்கான கோபத்தில். ஒருவர்மீது ஆத்திரம் வரும்போது இப்படி அவர் பற்றிய இரகசியங்களை வெளியிடுவது தவிர்க்க முடியாததுதான்.

அப்படியெனில், சுமந்திரனும் சாணக்கியமீதான கோபத்தில்தான் அப்படி இரகசியத்தை பகிரங்கப்படுத்தினாரா என்று கேட்டுவிடாதீர்கள். அது அவரிடம் கேட்கவேண்டியது.

நாமல் ராஜபக்ஷவை, ராஜபக்ஷக்களை அடிக்கடி சந்திக்கின்ற ஒருவருக்கு நாமல் இப்போதும் தனது தொகுதிக்கு போய்வ ருகின்றார் என்பதோ, அல்லது அவர் அங்கே மக்களைச் சந்திப்பதோ தெரியாது என்றும் நம்பமுடியவில்லை. அப்படியிருக்க ஏன் அவர் அவ்வாறு கூறினார் என்பதும் அவருக்கு மாத்திரமே தெரிந்த சங்கதி.

“யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோது, கொழும்பு இரவு விடுதிகளில் சாணக்கியன் கும்மாளமடித்துக் கொண்டிருந்த காலங்களிலேயே நாங்கள் தமிழர் பிரதேசங்களில் அபிவிருத்திகளையும் தமிழ் மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றும் பணிகளையும் செய்யத் தொடங்கிவிட்டோம்“ என்ற நாமல் பதிலளித்திருக்கிறார்.

“பிள்ளையான் என்பவர் அன்றுதொடக்கம் இன்றுவரை தான் கொண்ட கொள்கையில் மாற்றமின்றி, கட்சித் தாவலின்றி எம்மோடு தொடர்ந்து பயணித்து வருகிறார். அவரின் கட்சி நிகழ்வில் நாம் கலந்துகொள்வது தார்மீகக் கடமையும்கூட. நிலைமை அப்படியிருக்கையில், அலரி மாளிகைக்கு அடிக்கடி வந்து எம்மோடு தேநீர் அருந்துவதும், நிலையான அரசியல் கொள்கையின்றி கட்சிதாவி சுயநலத்துக்காக தமிழ் மக்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்துவதையும் பார்க்கும்போது வேடிக்கையாக இருக்கிறது.” என்றும் நாமல் மேலும் தெரிவித்திருக்கிறார்.

ராஜபக்ஷக்களின் நண்பர்களையும் இப்போது தமிழ் மக்கள் தமிழ்த் தேசியவாதிகளாக ஏற்றுக்கொள்ளத் தொடங்கிவிட்டனர் என்பது நாமலுக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால், நமது சாணக்கியவுக்கு நன்றாகவே தெரிந்திருக்கின்றது.

**- ஊர்க்குருவி**

# இலங்கை மாணவர்களுக்கு சீனா 5000 மெற்றிக் தொன் அரிசி உதவி

கொழும்பு, செப். 10

இலங்கை மாணவர்களுக்கு அரிசி வழங்கும் வேலைத்திட்டத்தின் ஒரு கட்டமாக, 5,000 மெற்றிக் தொன் அரிசி சீனாவினால் அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

கல்வி அமைச்சில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, சீனத் தூதுவர் சென் ஹொங் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சீன மக்களின் நட்புறவின் மற்றுமொரு அடையாளமாக, இலங்கை மக்களுக்கு பிரதானமாக அரிசி வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 10 இலட்சம் மாணவர்களுக்கு சீன அரசு அரிசி உதவி வழங்கவுள்ளது.



இந்த வேலைத்திட்டம் தெரிவு செய்யப்பட்ட 7,925 பாடசாலைகளில் அமுல்படுத்தப்படவுள்ளதுடன், இலங்கையிலுள்ள மொத்த பாடசாலைகளில் 78 வீத பாடசாலைகளை இது உள்ளடக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# நீலியாமோட்டையில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்!

வவுனியா, செப். 10

“கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்” என்னும் தொனிப்பொருளில் வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினால் முன்னெடுக்கப்படும் 100 நாட்கள் செயல்முனைவின் 40ஆவது நாள் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பிரதேசத்தின் நீலியாமோட்டை கிராமத்தில் நடைபெற்றது.

இச்செயற்றிட்டத்தில் செட்டிகுளம் பிரதேச மக்கள், சிவில் சமூக அமைப்புக்கள், பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் விவசாய, நன்னீர் மீனவ அமைப்புக்கள், என பலரும் கலந்து கொண்டு கௌரவமான அரசியல்தீர்வுக்கான கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இதன்போது நாங்கள் நாட்டை துண்டாடவோ தனி அரசோ கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம், எமக்கு வேண்டும் எங்கள் நிலம், ஒன்று கூடுவது எமது உரிமை, வடக்கு கிழக்கு மக்களுக்கு அதிகார பகிர்வு என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும் போன்ற பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. (அ)

# ஜெனரேட்டர்களுக்கு கியூ.ஆர். மூலம் எரிபொருள்

கொழும்பு, செப். 10

மோட்டார் அல்லாத வகைகளின் பதிவுசெய்யப்பட்டுள்ள உபகரணங்கள் தேசிய எரிபொருள் விநியோக முறைமையில் புதிய அம்சமாக சேர்க்கப்பட்டுள்ளதாக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் அறிவித்துள்ளது.

ஜெனரேட்டர்கள், புல் வெட்டும் கருவிகள் மற்றும் பிற உபகரணங்கள் போன்ற மோட்டார் அல்லாத வகைகளுக்கு கியூ.ஆர். மூலம் எரிபொருளை விநியோகிக்கும் திறன் இப்போது கிடைக்கப்பெற்றுள்ளதாக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் தெரிவித்துள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சினால் பதிவு செய்யும் முறை குடிமக்கள் மற்றும் வணிகங்களுக்கு அறிவிக்கப்படும் என்று இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் மேலும் கூறியது. (அ)

# வவுனியா ஆலயத் திருவிழாவில் வாள்வெட்டு; மூன்று பேர் காயம்!!

வவுனியா, செப். 10

வவுனியா - பொன்னாவரசன்குளம் பகுதியில் ஆலயம் ஒன்றின் திருவிழாவின்போது ஆலயத்துக்குள் இடம்பெற்ற வாள்வெட்டு மற்றும் அடிதடி காரணமாக மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, பொன்னாவரசன்குளம் பகுதியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயம் ஒன்றில் கடந்த 10 தினங்களாக வருடாந்த திருவிழா நடைபெற்று வருகின்றது.

நேற்று முன் தினம் மாலை திருவிழாவின்போது ஆலயத்தில் நின்ற சிலருக்கும், ஆலயப் பகுதிக்கு வந்த பிறிதொரு குழுவினருக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக நேற்று ஆலயத்தில் கொடி இறக்குவதற்கான பூசைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது அங்கு வந்த குழுவினருக்கும், ஆலயத்தில் நின்றவர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதுடன், வாள் வெட்டுத் தாக்குதல்களும் இடம்பெற்றன.

இச் சம்பவத்தில் காயமடைந்த 3 பேர் வவுனியா வைத்தியசாலையல் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆலய நிர்வாகத்தினர் உட்பட ஆண்கள், பெண்கள் உள்ளடங்கலாக 20 பேர் வரையில் நெளுக்குளம் பொலிஸாரால் கொண்டு செல்லப்பட்டு அவர்களிடம் விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஆலயத் தலைவரை விடுவித்த பின்னரே கொடி இறக்கப்படும் எனத் தெரிவித்து அப் பகுதியைச் சேர்ந்த மக்கள் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திற்கு முன் திரண்டனர். குறித்த சம்பவம் தொடர் பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

ஈழநாடு
Eelanadu
10.09.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 27

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தமிழ் அரசு கட்சியின் எதிர்காலம்?

1949இல் உருவாக்கப்பட்ட இலங்கை தமிழ் அரசு கட்சியே ஈழத் தமிழ்த் தேசிய அரசியலின் முன்னோடி கட்சியாகும். தமிழர் அரசியலுக்கு தேசிய முகம் கொடுத்த கட்சியென்னும் பெருமை இதற்கு உண்டு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (சைக்கிள்) தமிழ் தேசிய அரசியலுக்கு உண்மையாக இருக்கவில்லையென்னும் விமர்சனத்திலிருந்துதான் செல்வநாயகம் தமிழ் அரசு கட்சியை உருவாக்கினார். அதன் பின்னர், மாறிவரும் அரசியல் சூழலுக்கு தமிழ் அரசு கட்சி போதுமானதல்ல என்னும் அடிப்படையில்தான் தமிழர் விடுதலை கூட்டணியை ஸ்தாபித்தார். இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தை நோக்கி சிந்திக்க ஆரம்பித்த காலத்தில்தான் புதியதொரு தமிழ்த் தேசிய கூட்டணி அவசியம் என்பதை செல்வநாயகம் உணர்ந்தார். இந்த பின்புலத்தில்தான் இலங்கை தமிழ் அரசு கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் இணைவில் 1972இல் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணி உதயமானது.

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் உருவாக்கத்தை தொடர்ந்து 2001வரையில் இலங்கை தமிழ் அரசு கட்சி இயங்குநிலையில் இருக்கவில்லை. 2004ஆம் ஆண்டுதான் மீளவும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சின்னமான வீடு, தமிழ் வாக்களார்களுக்கு அறிமுகமானது. மாறிவரும் புதிய அரசியல் சூழலுக்கேற்ப இலங்கை தமிழ் அரசு கட்சி தன்னை மறுசீரமைத்துக் கொள்ளுமா அல்லது படிப்படியாக சிதைவடையுமா என்னும் கேள்வி பலர் மத்தியில் எழுந்திருக்கின்றது. இன்றைய நிலையில் தமிழ் அரசு கட்சியின் அடுத்த தலைவர் யார் என்னும் கேள்வி கட்சிக்குள்ளும் கட்சியின் ஆர்வலர்கள் மத்தியிலும் எழுந்திருக்கின்றது. இதே கேள்வியே தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடர்பிலும் எழுந்திருக்கின்றது.

செல்வநாயகம் உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி வெறுமனே ஆனந்தசங்கரியின் கட்சியாக சுருங்கிவிட்டது. அவ்வாறானதொரு நிலைதான் இலங்கை தமிழ் அரசு கட்சிக்கும் ஏற்படப் போகின்றதா? உண்மையில் இலங்கை தமிழ் அரசு கட்சி மீண்டும் தமிழ் தேசிய அரசியலில் முகம் காண்பித்தது தமீழீழ விடுதலைப் புலிகளால்தான். ஆனந்தசங்கரியுடன் ஏற்பட்ட முரண்பாடுகளின் காரணமாகவே வேறு தெரிவுகளின்றி தமிழ் அரசு கட்சியை கையிலெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. முன்னாள் இயக்கங்களின் கட்சியின் சின்னத்தைப் பயன்படுத்த விடுதலைப் புலிகளின் தலைமை விரும்பியிருக்கவில்லை.

அவர்களுக்கு முன்னால் இரண்டு தெரிவுகள்தான் இருந்தன. ஒன்று, தமிழ் அரசு கட்சி அடுத்தது அகில இலங்கை தமிழ் காங்கிரஸ். ஆனால், விடுதலைப் புலிகளின் தலைமை அகில இலங்கை தமிழ் காங்கிரஸை ஏற்றுக் கொள்ளவில்லை. அப்போது இது தொடர்பில், அப்பாத்துரை விநாயகமூர்த்தி கோரிக்கை விடுத்திருந்தபோதிலும்கூட, அதனை விடுதலைப் புலிகள் அமைப்பு ஏற்றுக்கொள்ளவில்லை. அகில இலங்கை தமிழ் காங்கிரஸை தமிழ் தேசிய நோக்கில் பார்க்க முடியாது, அதற்கு அவ்வாறான முகம இல்லை என்பதாலேயே விடுதலைப் புலிகள் அமைப்பு காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தை நிராகரித்திருந்தது.

ஒரு தற்செயல் நெருக்கடியின் விளைவாகவே தமிழ் அரசு கட்சியின் வீட்டு சின்னம் மீளவும் அரசியல் அரங்குக்கு அறிமுகமானது. இந்த நிலையில் கடந்த 18 வருடங்களாக தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளை பிரதிபலிக்கும் ஒரு பிரதான கட்சியாக தமிழ் அரசு கட்சி மக்கள் மனதில் இருக்கின்றது. ஆனால், தொடர்ந்தும் இருப்பதற்கான தகுதி நிலையுடன் இருக்கின்றதா? ஒரு மக்களுக்கான அரசியல் ஸ்தாபனமானது புதிய அரசியல் நிலைமைகளுக்கு ஏற்ப அதனை காலத்துக்கு ஏற்ற வகையில் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அதனால் புதிய நெருக்கடிகளை எதிர்கொள்ள முடியாமல் போய்விடும்.

இது தமிழ் அரசு கட்சிக்கு மட்டுமல்ல தற்போது அரசியல் அரங்கிலிருக்கும் அனைத்து கட்சிகளுக்கும் பொருந்தும். இன்று தமிழ்த் தேசியத்தை முன்னிலைப்படுத்தும் அனைத்து கட்சிகளுமே பழைய காலகட்டத்தின் கட்சிகள்தான். புதிய மாற்றங்களுக்கு ஏற்ப புதிய சிந்தனையும் புதிய கட்டமைப்பும் அவசியம். கடந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தோல்வியடைந்தார். அதன் பின்னராவது கட்சியின் கட்டமைப்பை மறுசீரமைப்பது தொடர்பில் சிந்தித்திருக்க வேண்டும். ஆனால், சிந்திக்கவில்லை?

# சிகிரிய குன்றின் மீது இரண்டாவது எலிசபெத் மகாராணியார்!



## அனந்த பாலகிட்டணர்

*“ஈழநாடு“ பத்திரிகையில் பணியாற்றிய பின்னர் 1989ஆம் ஆண்டு கொழும்பின் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் “சண்டே ஒப்ஸேவர்“ ஆங்கில பத்திரிகையில் சேர்ந்து கொண்டேன். அப்போது எனக்கு மிக மூத்தவர்களாக இருந்த ஆங்கில மொழி பத்திரிகையாளர்களின் சகவாசம் மட்டும் கிடைத்திருக்கவில்லை. லேக் ஹவுஸ் நிறுவனத்தில் அப்போது பணியாற்றிய சிரேஷ்ட பத்திரிகை படப்பிடிப்பாளர்களுடனான சகவாசமும் எனக்கு கிடைத்திருந்தது. அவர்களில் பெரும்பாலானவர்கள் கறுப்பு - வெள்ளை படச்சுருள் காலத்தைச் சேர்ந்த அனுபவஸ்தர்கள்.*

*வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வுகள் பலவற்றை புகைப்படங்களாக எடுத்துத் தமக்கு பெருமை சேர்த்தவர்களாகவும் சிலர் இருந்தனர்.*

*எழுத்து மூலமான செய்திகளைவிட படங்களே அதிக விளக்கங்களை தரும் என்று குறிப்பிடுவதுண்டு. இதற்கமைவாக கறுப்பு - வெள்ளை படச்சுருள் காலத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்களின் படங்கள் யாவும் அற்புதமானவையாகவும் அவை அழகுற கதை சொல்பவையாகவும் அமைந்திருக்கும்.*

*லேக் ஹவுஸ் நிறுவனத்தில் மிக அனுபவஸ்தர்களான படப்பிடிப்பாளர்களை சந்தித்ததோடு மட்டுமல்ல, அவர்கள் எடுத்த புகைப் படங்களை கோவைப்படுத்தி அவை எடுக்கப் பட்ட ஆண்டுகள், மாதங்கள், நாட்கள் என்பவைகூட லேக்ஹவுஸ் நிறுவன நூலக வைப்பகத்தில் நேர்த்தியாக பாதுகாக்கப் பட்டவையாகவே இன்றுவரை இருக்கின்றன.*

*லேக் ஹவுஸ் நிறுவன நூலகம் ஆவணப் படுத்தப்பட்ட தகவல்கள், செய்திகள் மற்றும் புகைப்படங்கள் என்பவற்றுக்கு மிகப்பிரபலமானதாகும்.*

*பணி முடித்து ஓய்வு நேரங்களில் ஆவணப் படுத்தப்பட்ட தகவல்கள், செய்திகளை லேக் ஹவுஸ் நூலகத்தில் பார்ப்பதோடு மட்டுமல்ல, சுவாரஸ்யமான செய்திகளை எழுதிய மூத்த பத்திரிகையாளர்கள் மற்றும் அரிய புகைப்படங்களை எடுத்த படப்பிடிப்பாளர்களோடும் உரையாடுவதுகூட அரிய சந்தர்ப்பமாகவே இருந்தது.*

*அத்தகைய கறுப்பு - வெள்ளை படச்சுருள் கால பத்திரிகை படப்பிடிப்பாளர்கள் மிகப் பண்பானவர்கள். அவர்களோடு நிகழ்ச்சிகள் மற்றும் செய்தி சேகரிக்கும் களப்பயணங்களுக்குச் செல்லும்போது இளைய பத்திரிகையாளர்கள் என்று தெரிந்தாலும் மிக பண்பாகவும் தமது அனுபவங்களை எம்மோடு பகிர்ந்து கொள்பவர்களாகவுமே இருப்பார்கள்.*

*இத்தகைய பத்திரிகை படப்பிடிப்பாளர்களில் பறங்கியர் இனத்தைச் சேர்ந்த டக்ளஸ் டயஸ் என்பவர் லேக் ஹவுஸ் நிறுவனத்தில் எனது நண்பராக இருந்தார். ஒரு தடவை என்னோடு உரையாடிக்கொண்டிருந்தபோது நேற்று முன்தினம் காலமான பிரிட்டனின் இரண்டாவது எலிசபெத் மகாராணியார் 1954ஆம் ஆண்டு முதல் தடவையாக தமது கணவர் இளவரசர் பிலிப்புடன் இலங்கை வந்ததை நினைவுபடுத்தினார். அப்போது லேக் ஹவுஸ் நிறுவனத்தால் மகாராணியாரின் இலங்கை வருகையைப் படம்பிடிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட படப்பிடிப்பாளர்களில் ஒருவராக தாம் இருந்தாரெனவும் டக்ளஸ் டயஸ் என்னிடம் குறிப்பிட்டிருந்தார்.*

*அரச குடும்பத்தினர் உட்பட பிரித்தானியர்களில் பெரும்பாலானவர்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவற்றை பார்ப்பதிலும் படிப்பதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவர்கள்.*

*இலங்கைக்கு இரண்டாவது எலிசபெத் மகாராணியார் முதல் தடவையாக பயணம் செய்தபோது பார்வையிட ஆர்வம் கொண்ட இடமே உலக அதிசயமாகக்கூட கணிக்கப்பட முடியும் என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்ற சிகிரிய மலைக்குன்றாகும்.*

*இந்தக் குன்றின் மேல்பகுதியில் அமைந்துள்ள கட்டடக் கலையம்சங்கள் காசியப்ப மன்னரால் வியத்தகு விதத்தில் உருவாக்கப் பட்டவை.*


*எனவே, இரண்டாவது எலிசபெத் மகாராணியார் 1954ஆம் ஆண்டு இலங்கை வந்திருந்தபோது அவரை சிகிரிய மலைக்குன்றுக்கும் அழைத்துச்சென்றார் அன்றைய பிரதம மந்திரியாக இருந்த சேர் ஜோன் கொத்தலாவல. சிகிரிய மலைக்குன்றின் மேல் பகுதிக்கு அப்போதிருந்த படிக்கட்டுகள் வழியாக அன்று இலங்கையிலேயே தமது 28ஆவது வயதை பூர்த்தி செய்த மகாராணி யார் தமது கணவர் பிலிப் இளவரசர் மற்றும் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல சகிதம் ஏறிச்சென்றார்.*

*அப்போது சற்று பலமாகவே காற்று வீசியதன் காரணமாக எலிசபெத் மகாராணியாரின் ஆடை காற்றில் மேலெழும் நிலையும் ஏற்பட்டிருந்தது. அச்சமயம் மகாராணி யாரைத் தொடர்ந்து சிகிரிய குன்றின் மீது ஏறிக் கொண்டிருந்த பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல லேக் ஹவுஸ் படப்பிப்பாளர் டக்ளஸ் டயஸைப் பார்த்து “எடுக்கிற படங் களை அழகாக எடு நண்பரே”, என்று சிங்களத் தில் இரட்டை அர்த்தத்தில் கூறினாராம். அப்போது டக்ளஸ் டயஸ் சேர் ஜோனின் வேடிக்கையான பேச்சை கேட்டு வாய்விட்டு சிரிப்பதைவிட வேறு எதுவும் செய்ய முடியாதிருந்தது என்று என்னிடம் கூறினார்.*

*1981ஆம் ஆண்டு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவரத்தனவின் ஆட்சியில் இரண்டாவது தடவையாக எலிசபெத் மகாராணியார் இலங்கை வந்திருந்தார். அப்போது “ஈழநாடு“ பத்திரிகையில் நான் சேர்ந்திருந்த காலம்.*

*காலஞ்சென்ற ஈழநாடு பதிலாசிரியர் பி. எஸ். பெருமாள் என்னிடம் எலிசபெத் மகாரணியாரின் அன்றைய இரண்டாவது இலங்கை வருகை பற்றி சில தகவல்களை தொகுத்து எழுதும்படி கூறியதையும் இத்தருணத்தில் ஞாபகப்படுத்த வேண்டியவனாக உள்ளேன்.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்** நண்பர்களின் ஆதரவுடன் புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த வருமானம் வரும். மனதில் இருந்து வந்த குழப்பம் விலகும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். முயற்சி நிறைவேறும்.

**இடபம்** நீங்கள் நினைக்கும் செயல் நிறைவேறும். தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். பணிபுரியும் அலுவலகத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். உங்கள் செயலை மற்றவர் புகழ்வார்கள்.

**மிதுனம்** எதிர்பார்த்த பணம் வந்து சேரும். வசதி வாய்ப்பு அதிகமாகும். புதிய பொருட்கள் வாங்கி மகிழ்வீர்கள். வருமானத்தில் ஏற்பட்ட தடையை சரி செய்வீர்கள். முயற்சி வெற்றியாகும்.

**கடகம்** மனதில் தேவையற்ற குழப்பம் உண்டாகும். எதிர்பார்த்த செயல் தள்ளிப் போகும். உங்கள் எதிர பார்ப்புகள் இழுபறியாகும். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள்.

**சிம்மம்** திட்டமிட்டு செயல்பட்டு நீங்கள் நினைத்ததை சாதித்துக் கொள்வீர்கள். தடை விலகும். உடல் ஆரோக்யத்தில் இருந்து வந்த சங்கடம் அகலும். உங்கள் எண்ணம் நிறைவேறும்.

**கன்னி** உற்சாகத்துடன் செயல்படுவீர் என்றாலும் ஆரோக்யத்தில் கவனம் தேவை. நண்பர்கள் வழியே எதிர்பார்த்த பணம் கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகாக வாய்ப்பு தோன்றும்.

**துலாம்** உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். வருமானம் அதிகரிக்கும் நாள். திட்டமிட்டிருந்த செயல்களில் மாற்றம் செய்வீர்கள். உங்கள் தொழில் முடிவு லாபத்தை உண்டாக்கும்.

**விருட்சிகம்** திருமண வயதில் இருப்பவர்களுக்கு வரன் தேடி வரும். புதிய சொத்து வாங்குவீர்கள். வேலைக்காக மேற்கொண்ட முயற்சி வெற்றி பெறும். மனதில் இருந்து வந்த குழப்பம் விலகும்.

**தனுசு** தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும் நாள். புதிய சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்த உதவி வந்து சேரும்.

**மகரம்** குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கும். உங்கள் எண்ணம் இன்று நிறைவேறும். எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். மனம் மகிழும்படியான சம்பவம் ஒன்று நடைபெறும்.

**கும்பம்** உங்கள் எண்ணம் நிறைவேறும் நாள். தொழிலை விரிவு செய்ய முயற்சிப்பீர்கள். செயல்களில் சில தடை உண்டாகும். மன நிம்மதிக்காக மகான்கள் கோயிலுக்கு செல்வீர்கள்.

**மீனம்** செலவு அதிகரித்தாலும் உற்சாகமாக செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள். உங்கள் நலனில் அக்கறை செலுத்துவீர்கள். எதிர்பாராத செலவுகளால் தடுமாற்றம் ஏற்படும். புதிய சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும்.

# “தமிழை நான் நிச்சயம் கற்றுகொள்ள வேண்டும்!”

சென்னை, செப். 10

நான் நிச்சயம் தமிழ் கற்றுக் கொள்ள வேண்டும். தமிழ் அழகான மொழி என்று காங்கிரஸ் கட்சியின் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

ராகுல்காந்தி “பாரத் ஜோடோ யாத்ரா“ என்ற இந்திய ஒற்றுமை பயணத்தை கடந்த புதன்கிழமை கன்னியாகுமரியில் தொடங்கினார். நடைபயணத்தில் ஈடுபட்டுவரும் அவர் நேற்று செய்தி யாளர்களை சந்தித்தார்.

இதன்போது, இந்த யாத் திரை பா. ஜ. க அரசாங்க இயந் திரத்தை எதிர்க்கும் யாத்திரை யாக மாறியுள்ளது. நான் நிச்சயம் தமிழ் கற்றுக் கொள்ள வேண்டும். தமிழ் அழகான மொழி. ஆனால், கற்றுக்கொள்வதற்கு கடினம் என நினைக்கி றேன்.

இந்தியாவின் ஒற்றுமைக்கா கவே நடை பயணம் மேற் கொண்டுள்ளேன். நடை பயணம் குறித்து பா. ஜ. க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களை வரவேற்கிறேன். பா. ஜ. க. கொள்கை களால் நாட்டுக்கு ஏற்பட்ட இழப்பு மற்றும் பிரிவினைக்கு எதிராக இந்த யாத்திரை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாடு முழுவதும் நடைபயணம் மேற்கொள்ள காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. காங்கிரஸ் உறுப்பினர் என்ற முறையில் அதில் பங்கேற்றுள்ளேன்.



வேலைவாய்ப்பு இல்லாமல் இளைஞர்கள் தவித்து வருகின்றனர். முக்கிய தொழில்கள் அனைத்தும் உலகின் 3ஆவது கோடீஸ்வரரின் கட்டுப்பாட் டில் உள்ளன. மக்களின் எதிர் பார்ப்புகளை அறியவே யாத்திரை மேற்கொண் டுள்ளேன். காங்கிரஸ் தன்னுடைய பாதையில் சரியாக சென்று கொண்டிருக்கிறது . நான் இந்த யாத்திரைக்கு தலைமையேற்க வில்லை. மற்ற நிர்வாகிகளை போல் நானும் பங்கேற்றுள் ளேன்.

எனக்கு மட்டுமே நீங்கள் முக்கியத்துவம் கொடுக்கிறீர் கள். இந்த யாத்திரையில் காங்கி ரஸார் மட்டுமல்ல பொது மக்களும் கலந்து கொண்டுள்ளனர் - என்றார். (ஐ)

# இராமேஸ்வரம் கடற்றொழிலாளர் காலவரையறையற்ற போராட்டம்!

இராமேஸ்வரம், செப். 10

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர் களையும் படகுகளையும் விடு விக்க வலியுறுத்தி இராமேஸ் வரம் மீனவர்கள் காலவரை யறையற்ற வேலை நிறுத்த போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளனர்.

இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மீனவர் சங்கங்களின் அவசர ஆலோசனை கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை காலை நடை பெற்றது.

இந்தக் கூட்டத்தில் மீனவர் சங்க தலைவர்கள் மற்றும் மீன வர்கள் கலந்து கொண்டு ஆலோசனை நடத்தினர். இந்த ஆலோசனைக்கு பின் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட் டன. நேற்று முதல் போராட் டம் முன்னெடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இலங்கை கடற் படையால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களையும் படகு களையும் உடனே விடுவிக்க வேண்டும், கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை இலங்கை கடற் படை சிறைபிடிக்கப்பட்ட 115 படகுகளுக்கு தமிழக அரசு ஐந்து இலட்சம் ரூபாய்



நிவாரணம் வழங்கப்பட்டது.

இதில் எஞ்சிய 7 படகுகளுக் கும் அதே சேதமடைந்த 30 படகுகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும், வரலாறு காணாத டீசல் விலை உயர்வு காரணமாக மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது, தற் போது தமிழக அரசால் வழங்கி வருகின்ற 1800 லீற்றர் மானிய டீசல் 3000 லீற்றராக உயர்த்தி தர வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இராமேஸ்வரம் மீனவர்கள் இன்று முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட் டத்தை தொடங்கியுள்ளனர்.

அதே போல மேற்கொண் டுள்ள தீர்மானங்களை வலியு றுத்தியும் மத்திய மாநில அரசு களின் கவனத்திற்கு கொண்டு செல்லும் விதமாக வரும் செவ்வாய்க்கிழமை 13ஆம் திகதி தங்கச்சிமடம் வலசை தெருவில் கண்டன ஆர்ப்பாட் டம் நடத்த போவதாகவும் தீர் மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த வேலை நிறுத்தம் காரணமாக ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் 800 மேற்பட்ட விசைப்படகுகள் தற்போது நங்கூரமிட்டு நிறுத் தப்பட்டுள்ளது. இந்த தொழி லில் நேரடியாகவும் சார்பு தொழிலாகவும் பத்தாயிரத்து மேற்பட்ட மீனவர்கள் வேலை இழக்கும் சூழல் ஏற்பட்டுள் ளது. (ஐ)

# கோயில்களில் தமிழில் குடமுழுக்கு நடத்த கணிப்பு!

சென்னை, செப். 10

கோயில்களில் தமிழில் குடமுழுக்கு நடத்துவ தற்கு, தமிழ் ஆகம முறைப்படி திருக்குட நன்னீ ராட்டு விழா நடத்தி வரும் அமைப்புகள் தங்க ளது கருத்துகளை தெரிவிக்கலாம் என அறநிலை யத் துறை அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக, இந்து சமய அறநிலையத் துறை அறிக்கையை வெளியிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவின்படி கோயில்களில் தமிழில் குட முழுக்கு நடத்துவது தொடர்பாக உத்தரவு பிறப் பிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, அறநிலை யத் துறை ஆணையர் அலுவலகத்தில் கடந்த மாதம் 18ஆம் திகதி குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், பேரூர்சாந்தலிங்க மருதாசல அடிக ளார், சிரவை ராமானந்த குமரகுருபர சுவாமிகள், செந்தமிழ் வேள்விசதுரி முதுமுனைவர் சக்திவேல்முருகனார், சுகிசிவம் ஆகியோர் பங்கேற்ற கூட்டம் நடைபெற்றது.

தமிழில் மந்திரங்களை ஓதி, திருக்குட நன்னீ ராட்டு நடத்தி வரும்அமைப்புகளிடம் இருந்து கருத்துகளை கோருவது என்று அந்த கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

எனவே, இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில் சம்ஸ்கி ருதம் மட்டுமின்றி ஒரே சீராகதமிழில் குடமுழுக்கு நடத்த ஏதுவாக, தமிழ் ஆகம முறைப்படி திரு முறை (சைவ கோயில்கள்), பிரபந்த (வைணவ கோயில்கள்) மந்திரங்களை ஓதி திருக்குட நன்னீராட்டு விழா நடத்தி வரும் அமைப்புகள் கருத்துகளை அளிக்கலாம் - என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)



# கொடிகாமம் பொலிஸாரால் வீதி ஓரங்களில் மரம் நடுகை

யாழ்ப்பாணம், செப். 10

இலங்கை பொலிஸ் சேவையின் 156 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கொடிகாமம் பொலிஸார் கொடிகாமம் ஓட்டோ உரிமையாளர் சங்கத்துடன் இணைந்து நேற்று முன்தினம் காலை கொடிகாமம் பகுதியில் வீதி ஓரமாக மரம் நாட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கொடிகாமம் பொலிஸ் நிலைய பொலிஸாரும் கொடிகாமம் ஓட்டோ உரிமையாளர் சங்கம் என பலரும் கலந்து கொண்டு வீதியோரத்தில் மரங்களை நாட்டி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மாற்றுத் திறன் மாணவர்களுக்கான ஆதரவு நிலையம் யாழ்.பல்கலையில்

யாழ்ப்பாணம், செப். 10

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தில் கல்வி பயிலும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கும் சம வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான ஆதரவு நிலையம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

கலைப்பீட கட்டடத் தொகுதியின் கீழ்த் தளத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு இந்த மாற்றுத் திறனாளிகளுக்கான ஆதரவு நிலையம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவினால் திறந்து வைக்கப்படவுள்ளது. (அ)

# எந்தவோர் அரசியல் சதியாலும் இந்த அரசை கவிழ்க்க முடியாது!

## அடித்துக் கூறுகிறார் பிரதமர் தினேஷ்

கொழும்பு, செப். 10

**“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த ஆட்சியை ஒருபோதும் கவிழ்க்க முடியாது. இந்த ஆட்சியில் அரசியல் சூழ்ச்சிக்கு ஒருபோதும் இடமில்லை.”**

- இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

என்னைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பிரதமராக்க ஆளும் தரப்புக்குள் சிலர் சூழ்ச்சி செய்கின்றனர் என்று வெளியாகியுள்ள செய்தி முற்றிலும் வதந்தி.

ஜனாதிபதியின் விருப்பத்துடனும் ஆளும் கட்சியின் பெரும்பான்மைப் பலத்துடனும் நான் பிரதமர் பதவியை வகிக்கின்றேன். இது நான் தேடிச் சென்று பெற்ற பதவி அல்ல. இந்தப் பதவி என்னைத் தேடியே வந்தது.

பிரதமர் பதவியிலிருந்து என்னை நீக்கத் திரைமறைவில் எந்தச் சூழ்ச்சியும் இல்லை. எவரினதும் அழுத்தமும் எனக்கு வரவும் இல்லை.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஏகோபித்த ஆதரவுடன்தான் நான் பிரதமர் பதவியை வகிக்கின்றேன். நாடு திரும்பியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்குள் பிரவேசிக்கும் இன்னமும் முடிவை எடுக்கவில்லை.

அவர் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக வுள்ளார் எனவும், பிரதமராகப் போகின்றார் எனவும் வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை- என்றார். (அ)

# இராஜாங்க அமைச்சரவைக்கு எதிராக சஜித் அணி தீர்மானம்

## செயல்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றம்

கொழும்பு, செப். 10

அதிக எண்ணிக்கையிலான இராஜாங்க அமைச்சரவையை ஜனாதிபதி நியமித்தமைக்கு எதிராக சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்ப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“நாடு மிகவும் பாரதூரமான முறையில் வங்குரோத்தடைந்துள்ள நேரத்தில், வாழ்க்கைச் செலவு அதிகரித்துப்போன நேரத்தில், அரசால் தன்னிச்சையாகவும், நெறிமுறையற்றதுமாக இராஜாங்க அமைச்சர்கள் 37 பேரளவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பெரும் எண்ணிக்கையிலான இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பது இத்தருணத்தில் நாட்டுக்கு ஏற்றுக்கொள்ள முடியாது என்பதோடு, அது மேலும் இந்த நாட்டை அதல பாதாளத்துக்குத் தள்ளும் என்று ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாக நம்புகின்றது.

இந்த வீணான நிலைமைக்கு எதிரான மக்களின் எதிர்ப்புப் போலவே குடிமக்கள் போராட்டத்தின் நோக்கங்களை மீறி இந்த மிகப் பெரிய இராஜாங்க அமைச்சரவையை நியமித்ததன் மூலம் அரசு பழைய வழமையான பாதையில் பயணிக்கின்றது என்பதையே மறைமுகமாக உணர்த்துகின்றது. இதன் பிரகாரம், இந்தப் பாரிய இராஜாங்க அமைச்சர வையை ஜனாதிபதி நியமித்த மைக்கு எதிராக நேற்றுக் கூடிய ஐக்கிய மக்கள் சக்தியின் செயற் குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட் டது” - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# பரீட்சை திணைக்கள இணையத்தளத்துக்குள் ஊடுருவி உயர்தர முடிவுகளை தனியாக வெளியிட்ட மாணவன்!

கொழும்பு, செப். 10

பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை ஹக் செய்து, அதன் தரவுகளைக் கொண்டு, தனியான இணையத்தளம் உருவாக்கி, 2021 க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளை வெளியிட்ட மாணவனை, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சைபர் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

270,000 உயர்தர மாணவர்களின் பெறுபேறுகளை திருடிய இப்பாடசாலை மாணவர், பரீட்சார்த்திகள் தமது பெறுபேறுகளை சரிபார்க்க பரீட்சைகள் திணைக்களத்தைப் போன்று தனியான இணையத்தளத்தை அமைத்திருந்தார்.

சந்தேகநபர் தற்போது காலியில் உள்ள முன்னணி பாடசாலை ஒன்றில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பத்தை பயின்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பரீட்சைகள் திணைக்களத்தின் தலைவர் எல்.எம்.டி.தர்மசேனவின் முறைப்பாட்டின் அடிப்படையில் திணைக்களத்தின் சைபர் கிரைம் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விரிவான விசாரணையின் பின்னரே இந்த மாணவர் கைது செய்யப்பட்டதாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பரீட்சை திணைக்களத்தின் இணையத்தளத்தின் ஊடாக விண்ணப்பதாரரின் சுட்டெண் அல்லது அவரது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிடுவதன் மூலம் மட்டுமே உயர்தர பெறுபேறுகள் உட்பட பரீட்சை முடிவுகளை சரிபார்க்க முடியும். எனினும், பரீட்சை முடிவுகள் ஒருபோதும் பெயர் சரிபார்ப்பு மூலம் வழங்கப்படவில்லை. இரகசியத்தன்மை அதிகபட்சமாக பாதுகாக்கப்படுவதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

“ஆனால் இந்த மாணவரின் இணையத்தளத்தில் விண்ணப்பதாரர்களின் பெயர்களை உள்ளிடுவதன் மூலம் மாணவர்களின் முடிவுகளை சரிபார்க்க முடிந்துள்ளது.

பரீட்சார்த்திகளின் முழுப் பெயர் முழுமையாகத் தெரியாத நிலையிலும், அணுகியவர்களுக்கு முடிவுகளைச் சரிபார்க்கும் வசதியை இந்தப் புதிய இணையத்தளம் வழங்கியுள்ளது.

பெயரின் அறியப்பட்ட பகுதியை உள்ளிடும்போது, பரீட்சைக்கு தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களின் பெயர்களும் காட்டப்படும். அவற்றிலிருந்து குறிப்பிட்ட பெயரைத் தேர்ந்தெடுத்து முடிவு பட்டியலை சரிபார்க்க அங்கு வசதிகள் வழங்கப்படுகின்றன.

இந்த மாணவனின் பெற்றோர் ஆசிரியர்கள். அவருக்கு இரண்டு மூத்த சகோதரிகளும் இருப்பதாக சிஐடி தெரிவித்துள்ளது. சகோதரிகளில் ஒருவர் பல்கலைக்கழகத்திலும், மற்றைய சகோதரி உயர்தர வகுப்பிலும் படித்து வருகின்றனர்.

தொழில்நுட்பம் படிக்கும் பாடசாலை மாணவர்களை உள்ளடக்கிய 5,000 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட டெலிகிராம் குழுவின் மூலம் இணையதளங்களை ஹேக் செய்வது மற்றும் தரவுகளை திருடுவது எப்படி என்பது குறித்த தனது அறிவை இந்த மாணவர் பகிர்ந்து கொண்டதாக விசாரணையாளர்கள் தெரிவித்தனர்.

சைபர் கிரைம் பிரிவின் அதிகாரிகள் தந்திரோபாயமாக இந்த டெலிகிராம் குழுவில் நுழைந்து, குழுவில் தகவல் எவ்வாறு பகிரப்படுகிறது என்பதைக் கவனித்துள்ளனர். முதலில் ஒரு நிர்வாகியை அடையாளம் காண்பதில் அவர்கள் வெற்றி பெற்றுள்ளனர். குறித்த நிர்வாகியும் முன்னணி பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவன் என்பதுடன் அவர் தெஹிவளையை வசிப்பிடமாகக் கொண்டவர்.

இந்த டெலிகிராம் குழுவில் பகிரப்பட்ட தகவல்களை உன்னிப்பாக ஆய்வு செய்த புலனாய்வாளர்கள் சந்தேகத்திற்குரிய மாணவனை புதன்கிழமை காலியில் வைத்து கைது செய்துள்ளனர்.

அவர்களின் புதிய இணையத்தளத்தை ஹக் செய்ததை அடுத்து, குறித்த மாணவர் அடையாளம் காணப்பட்டதாக புலனாய்வாளர்கள் தெரிவித்தனர்.

இந்த மாணவன் டெலிகிராம் குழுவில் தனது இணையத்தள போர்டல் ஹக் செய்யப்பட்டுள்ளதாகவும் அதனை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் செய்தி வெளியிட்டிருந்தார்.

இதற்கு முன்னரும் ஒரு தடவை, பரீட்சை திணைக்களத்தின் இணையத்தளம் ஹக் செய்யப்பட்டு பெறுபேறு ஆவணம் தனியான இணைய அணுகல் ஊடாக வெளியிடப்பட்டதாக சந்தேக நபர் விசாரணையின்போது தெரிவித்திருந்தார்.

இந்தச் செயற்பாட்டை இம்மாணவன் எவ்வித குற்ற நோக்குடனும் செய்யவில்லை எனவும், தனக்குக் கிடைத்த அறிவைப் பயன்படுத்தி வேடிக்கை பார்க்கச் செய்துள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த மாணவர் உட்பட சுமார் 5,000 மாணவர்கள் குழுவைக் கொண்ட டெலிகிராம் குழுவிற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக புலனாய்வாளர்கள் தெரிவித்தனர். (அ)

# பொது படிவங்களை மீளாய்வு செய்ய விசேட குழு நியமனம்

கொழ்ழும்பு, செப். 10

பொதுப் படிவங்களை மீளாய்வு செய்வதற்காக ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க குழுவொன்றை நியமித்துள்ளார்.

அரச சேவைகளை இலகுபடுத்துவதற்காக பல்வேறு அரச நிறுவனங்களால் தற்போது 98 பொதுப் படிவங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இருப்பினும், சில படிவங்கள் காலத்துக்குப் பொருந்தாமல் இருப்பதனால் அவற்றை தற்போதைய தேவைக்கு ஏற்ப திருத்தம் செய்ய வேண்டியுள்ளது.

அதற்கமைய, பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் நிறுவனப் பணிப்பாளர் நாயகம் எச்.ஏ. சந்தன குமாரசிங்க (தலைவர்), நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகம் திருமதி டி. எச்.எஸ். புல்லேபெரும (உறுப்பினர்), பிரதமர் அலுவலகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (அபிவிருத்தி) திரு.யு.ஐ.டபிள்யூ. செனவிரத்ன (உறுப்பினர்) ஆகியோர் அரசாங்க அச்சகத்தால் அண்மையில் அச்சிடப்பட்டுள்ள அனைத்து பொதுப் படிவங்களையும் மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

# காலிமுகத்திடல் போராட்டக்காரரை தாக்கியவருக்கு இராஜாங்க அமைச்சு

## அரசைச் சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, செப். 10

"காலி முகத்திடல் போராட்டக்காரர்கள்மீது தாக்குதல் நடத்தியவர், நாடாளுமன்றத்தில் மிளகாய் தூள் தாக்குதல் மேற்கொண்டவர் , சீனாவிலிருந்து கழிவுக் கப்பலை நாட்டுக்கு கொண்டு வந்து நஷ்டத்தை ஏற்படுத்தியவர் ஆகியோருக்கும் இராஜாங்க அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டுள்ளன."

-இவ்வாறு ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், மக்களின் வரிப்பணத்தை வீண்விரயமாக்க இராஜாங்க அமைச்சுகள் நியமனம் எதற்கு எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (அ)

# பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்கள் செல்லுபடியாகும் காலவரையறை நீக்கம்

கொழும்பு, செப். 10

பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் வழங்கப்படும் அனைத்து சான்றிதழ்களின் பிரதிகளின் செல்லுபடியாகும் காலம் எந்தவித காலவரையறையும் இன்றி ஏற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக பிறப்புச் சான்றிதழ்கள், மரண மற்றும் திருமணச் சான்றிதழ்களின் செல்லுப்படியாகும் காலத்தை வரையறைக்கு உட்படுத்தாமல் ஏற்றுக்கொள்வதாக அறிக்கை ஒன்றை விடுத்து திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பிரதி உறுதி செய்யப்பட்டு வழங்கப்பட்ட காலம் 6 மாத காலத்துக்கு மாத்திரம் செல்லுபடியாகும் என இதற்கு முன்னர் வரையறுக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் இந்த நிலையின் காரணமாக துணைப் பிரதியை பெற்றுக்கொள்வதில் பொதுமக்கள் மத்தியில் பாரிய சிக்கல் இருக்கின்றமை அவதானிக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையை கவனத்தில் கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக குறிப்பிட்ட திணைக்களம் , பொதுமக்களுக்கு ஏற்பட்ட சிரமம் இதன்மூலம் குறைவடைவதாக சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, குடிவரவு குடியகல்வு திணைக்களம் மற்றும் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம் ஆகியவற்றுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், தங்களது நிறுவனத்தில் சேவை பெறுநர்களுக்கு இது தொடர்பில் தெளிவூட்டுமாறு பதிவாளர் நாயகம் பீ.எஸ்.பீ. அபேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

எனவே, பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ள தெளிவான சான்றிதழ் பிரதியொன்று இருக்குமாயின், மீண்டும் புதிய பிரதியொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என பதிவாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏதெனுமொரு நிலையில், பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டிருக்குமாயின் மாத்திரம் திருத்தப்பட்ட புதிய பிரதியை அந்தந்த நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டுமென பதிவாளர் நாயகம் பீ.எஸ்.பீ. அபேவர்தன தெரிவித்துள்ளார். (அ)

# சலுகைகள், சம்பளம் எதுவுமே வேண்டாம்!

## புதிய இராஜாங்க அமைச்சர்கள் தெரிவிப்பு

கொழும்பு, செப். 10

**நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு சலுகைகள் மற்றும் சம்பளம் தேவையில்லை என்று சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட இராஜாங்க அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.**

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை நிலைநாட்டுவது தற்போது மிக முக்கியப் பொறுப்பாகும். அதற்காக இராஜாங்க அமைச்சர்கள் என்ற வகையில் அரசின் பொறுப்புக்களை ஏற்று அமைச்சுக்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதே தமது எதிர்பார்ப்பு எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் புதிய இராஜாங்க அமைச்சர் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

**சாந்த பண்டார**

"தற்போதை நிலையில் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே ஜனாதிபதியினதும் பிரதமரினதும் எதிர்பார்ப்பாகும்.

பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது. எமக்குக் கிடைத்துள்ள அமைச்சுப் பொறுப்பு என்ன என்பதைவிட வழங்கப்பட்டுள்ள பொறுப்பை சரியாக நிறைவேற்ற வேண்டும் என்பதே பிரதானமானதாகும். நாங்களும் நியாயமாக செயற்பட வேண்டியுள்ளது.

புதிய அமைச்சர்கள் நியமனத்தால் நிறைய செலவுகள் ஏற்படும் என்று யாராவது நினைக்கலாம். அமைச்சருக்குரிய சம்பளத்தை பெற்றுக்கொள்ளாமல் எம்.பி.யின் சம்பளத்தை மட்டும் பெற்றுக்கொண்டு செயற்படுவதாக ஜனாதிபதியிடம் நாம் தெளிவாக கூறியுள்ளோம்.

ஜனாதிபதி அரசமைப்பின் பிரகாரம் செயற்பட்டார். அரசமைப்பை மீறும் வகையில் எந்தவொரு செயற்பாட்டையும் அவர் மேற்கொள்ளவில்லை என்பதை விசேடமாக குறிப்பிட வேண்டும்.

வலுவான அரசு இருந்தால் முதலீட்டாளர்களை ஈர்க்கவும் கடன் உதவிகளைப் பெற்றுக்கொள்ளவும் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டுக்கு அரசியல் ஸ்திரத்தன்மை தேவை. அதற்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் எம்.பி குழு அவசியமானது.

இந்த முடிவால் ஐ.எம்.எப். கடன் தொடர்பிலும் சாதகமான நிலை காணப்படுகிறது. ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட இலக்கின்படி அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற அதேவேளை ஜனாதிபதிக்கு எமது பாராட்டை தெரிவிக்க வேண்டும்" - என்று ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

**சாமர சம்பத் தசநாயக்க**

"சலுகைகளை எதிர்பார்க்காமல் நாம் கடந்த காலத்தில் பணியாற்றினோம். மேலும் எமக்கு வழங்கப்பட்ட இராஜாங்க அமைச்சு பொறுப்பை எமக்குக் கிடைத்த அணிகலனாக நாம் கருதவில்லை. சலுகைகள் பெறவும் வாகனங்கள் மற்றும் எரிபொருளுக்குப் பின்னால் ஓடுவதற்காக இந்த அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கவில்லை.

மக்களுக்குச் சேவை செய்யவே அமைச்சைப் பொறுப்பேற்றோம். புதிய பதவியின் மூலம் மக்களுக்கு அதிகபட்ச சேவையை அளிக்க எதிர்பார்த்துள்ளேன்" - என்று ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்துள்ளார்.

**ஜகத் புஸ்பகுமார**

"கடந்த காலங்களில் நாடு அரசியல் நெருக்கடியில் இருந்தது. அந்த நிலையில் யாரும் இந்த நாட்டை பொறுப்பேற்க முன்வரவில்லை. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றார். பின்னர் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

பாராளுமன்றத்தின் ஊடாக அவருக்கு ஆதரவை வழங்கினோம். ஜனாதிபதிக்கு உதவியாக இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.

ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் செயற்படும் வாய்ப்பு எமக்கு வழங்கப்பட்டுள்ளது. அவரின் கரங்களை வலுப்படுத்த இந்தப் பதவிகளை ஏற்றுக்கொண்டோம்.

பாராளுமன்றத்தைப் பலப்படுத்த வேண்டும் எனத் தொடர்ச்சியாகக் கூறி வந்தோம். அமைச்சு பொறுப்பு தொடர்பில் எமக்குச் சிக்கல் கிடையாது.

கொடுக்கப்பட்ட பொறுப்பை சரிவரப் பயன்படுத்த வேண்டும். வெளிப்படைத் தன்மையுடன் பணியாற்றுவதுதான் எனக்கு அளிக்கப்பட்ட பொறுப்பாகும்" - என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

**அருந்திக பெர்னாண்டோ**

"பல சுற்றுப் பேச்சுகளின் பின்னர் இராஜாங்க அமைச்சர்கள் பலர் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர். நிபந்தனையின்றி நாம் அவரை ஜனாதிபதியாக்கினோம்.

இராஜாங்க அமைச்சர்கள் என்ற வகையில், சிறப்பு சலுகைகள் எதனையும் பெறாமல், எம்.பிக்களுக்குரிய சம்பளத்தை மட்டுமே பெற முடிவு எடுத்துள்ளோம்.

நாட்டை வீழ்ச்சியடைந்த நிலையில் இருந்து காப்பாற்றும் ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு நிபந்தனையின்றி ஆதரவளிக்க முடிவு செய்துள்ளோம்" - என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

**அசோக பிரியந்த**

"தற்போதைய நிலையில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை உள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சு என்ற வகையில், நாட்டின் அனைத்து மாவட்ட அலுவலகங்களையும் பிராந்திய அலுவலகங்களையும் ஒன்று திரட்டி, அரசு இயந்திரத்தை பலப்படுத்தி, நாட்டை கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும்.

சலுகைகளை எதிர்பார்த்து நாம் இந்த முடிவை எடுக்கவில்லை. ஜனாதிபதியும் பிரதமரும் பலம் பெற்றால்தான் நாட்டு மக்களுக்கு சேவை செய்ய முடியும்.

இந்தநிலையில், நாட்டை கட்டியெழுப்புவதற்கு உள்நாட்டலுவல்கள் அமைச்சு தன்னால் இயன்ற பணிகளை மேற்கொள்ளும்" - என்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

**இந்திக்க அனுருத்த**

"நாட்டின் தற்போதைய நிலையில் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அந்தப் போராட்டத்தை வெற்ற கொள்ள அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியுள்ளது.

இந்தப் பதவியுடன் நாம் சம்பளம் அல்லது சலுகைகள் எதுவும் பெறமாட்டோம்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை வெல்வதற்கு கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம்" - என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார். (அ)

# இலங்கைக்குள் சர்வஜன வாக்கெடுப்பை தமிழ் கட்சிகள் வலியுறுத்துதல் அவசியம்!

## வலியுறுத்துகின்றார் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், செப். 10

**இலங்கைக்குள் ஒருபோதும் அரசியல் தீர்வு கிடையாது. அரசியல் யாப்பை உருவாக்கப் போவதாக கூறினாலும் ஒற்றையாட்சியை சுற்றித்தான் அது இருக்குமே ஒழிய எங்களை நாங்கள் ஆளக்கூடிய ஒரு கௌரவமான தீர்வு கிடைக்காது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.**

ஈழத்தில் இருக்கக்கூடிய தமிழ்த் தரப்புகள் பொது உடன்பாட்டுக்கு வந்து பொதுசன வாக்கெடுப்பை முன்வைப்பதன் ஊடாகவே அடுத்த கட்டத்தை நோக்கி நாம் நகர முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வல்வெட்டித்துறையில் உள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே எம்.கே.சிவாஜிலிங்கம் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போர்க்குற்றங்களுக்காக சர்வதேச நீதியைக் கோரி ஈழத் தமிழினம் போராடி வருகிறது. முள்ளிவாய்க்காலில் யுத்தம் நிறைவடைந்து 13 ஆண்டுகள் கடந்த நிலையிலும் ஜெனிவாவில் எங்கள் பிரச்னை இருந்து கொண்டிருக்கின்றது.

தமிழ்த் தரப்புகள் ஈழத் தமிழர்கள் விடயத்தில் ஒற்றுமையாக செயல்பட வேண்டும். பிரதான மூன்று அணிகளும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும். தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரச படைகளினால் நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலை உட்பட்ட குற்றங்களுக்கான நீதியை பெறக்கூடிய விதத்திலும், இனப் படுகொலை மீண்டும் இடம்பெறாமல் இருக்க மீள நிகழாமை அடிப்படையிலும், ஐ.நா. சபையின் கண்காணிப்பில் வடக்கு, கிழக்கு மாநிலத்



தில் பொதுசன வாக்கெடுப்பை நடத்த முன்வருமாறு சர்வதேச சமூகத்தைக் கோருகின்றோம்.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி தொடர்ச்சியாக இந்த கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றது. கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டாலும் பொதுசன வாக்கெடுப்பை கோருவதை தவிர்த்து வருகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தவரை பொதுவெளியில் இந்த கோரிக்கையை முன் வைக்கவில்லை. ரெலோ, புளொட் ஆகியன எங்களுடன் இணைந்து இந்த கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்தாலும் இலங்கை தமிழரசுக் கட்சி ஆதரவளிக்கவில்லை.

இலங்கைக்குள் ஒருபோதும் அரசியல் தீர்வு கிடையாது. அரசியல் யாப்பை உருவாக்கப் போவதாக கூறினாலும் ஒற்றையாட்சியை சுற்றிச் சுற்றித் தான் இருக்குமே ஒழிய எங்களை நாங்கள் ஆளக்கூடிய ஒரு கௌரவமான தீர்வு கிடைக்காது.

ஈழத்தில் இருக்கக்கூடிய தமிழ்த் தரப்புகள் பொது உடன்பாட்டுக்கு வந்து பொதுசன வாக்கெடுப்பை முன்வைப்பதன் ஊடாகவே அடுத்த கட்டத்தை நோக்கி நாம் நகர முடியும். புலம்பெயர் தேசத்தில் உள்ளவர்களும் தொப்புள் கொடி உறவுகளான தாய் தமிழக மக்களும் இதனை நோக்கி நகரவேண்டும்.

சுதந்திர தமிழீழம் வேண்டுமா இல்லையா என்ற சந்தர்ப்பம் புலம்பெயர் மக்களும் கலந்துகொள்ளக்கூடிய வகையில் வாக்களிப்புக்கு விடப்படவேண்டும்.

இதனை மக்கள் இயக்கமாக வலியுறுத்தி மாவட்டம் மாவட்டமாக பேரணியாக செல்லக் கூடிய விதத்தில் செய்து முடிக்க வேண்டும்.

கட்சி பேதங்களை கடந்து அனைவரும் இந்த விடயத்தில் ஒன்றுபடவேண்டும்.

கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக இந்தியாவில் தங்கி இருந்து பாண்டிச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி உட்பட பல கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடினேன். குவாட் அமைப்பில் உள்ள அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற நாடு கள் சீனா நடவடிக்கையை எதிர்த்து ஈழத் தமிழர்கள் பிரச் னையை முதன்மைப்படுத்தி செயல்பட வேண்டும்-என்றார். (அ)

# இங்கிலாந்துக்கு சென்ற இலங்கைக் குழுவினர் திருப்பியனுப்பப்பட்டமை குறித்து விசாரணை!

கொழும்பு, செப். 10

இங்கிலாந்துக்கு சென்ற இலங்கைக் குழு திருப்பியனுப்பப்பட்டமை குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பொதுநலவாய கராத்தே சம்பியன்ஷிப் 2022 இல் பங்கேற்பதற்காக இங்கிலாந்தில் உள்ள ஹீத்ரோ விமான நிலையத்தைச் சென்றடைந்தவுடன் இலங்கையின் தேசிய கராத்தே அணி நாடு கடத்தப்பட்டது.

தேவையான அனைத்து அனுமதிகளையும் பெற்றிருந்த இலங்கை கராத்தே அணியினரிடம் ஹீத்ரோ விமான நிலையத்தில் விசாரணை நடத்தப்பட்டதை அடுத்து விஸாக்கள் இரத்து செய்யப்பட்டு அவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டனர்.

மூன்றாம் தரப்பினருக்கும் தற்போதைய கராத்தே சம்மேளனத்துக்கும் இடையே ஏற்பட்ட மோதல் காரணமாகவே விஸா இரத்து செய்யப்பட்டுள்ளதாக இலங்கையின் விளையாட்டு மேம்பாட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுபோன்ற செயல்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ள விளையாட்டு மேம்பாட்டுத் துறை சம்பவம் குறித்து விசாரணை நடத்தி, குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# சுமார் 35 வீத உணவகங்கள் ஏற்கனவே மூடப்பட்டுள்ளன!

கொழும்பு, செப். 10

பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிப்புடன் நுகர்வோர் அந்த பொருட்களை கொள்வனவு செய்யாத நிலை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் இதனைத் தெரிவித்தார்.

இதன்காரணமாக உணவகங்கள் மூடப்படும் அபாயம் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வாடகை அடிப்படையில் நடத்தப்படும் சுமார் 35 வீதமான உணவகங்கள் ஏற்கனவே மூடப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# கொழும்பு துறைமுகத்திற்கு அருகே தரித்துள்ள 3 எரிபொருள் கப்பல்கள்?

கொழும்பு, செப். 10

பணம் செலுத்தாத காரணத்தினால் தற்போது மூன்று எரிபொருள் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்திற்கு அருகில் நங்கூரமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை வந்தடைந்த ஒரு இலட்சம் மெற்றிக் தொன் மசகு எண்ணெயை ஏற்றிய கப்பல் கடந்த 23ஆம் திகதி முதல் கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியே நங்கூரமிட்டுள்ளது.

மேலும் இரண்டு டீசல் கப்பல்கள் பல நாட்களாக கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அவற்றில் உள்ள டீசலின் அளவு 76 ஆயிரம் மெற்றிக் தொன் என தெரிவிக்கப்படு கின்றது.

இந்த கப்பல்களுக்கு உடனடியாக பணத்தைச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என விடயத்துக்கு பொறுப்பான அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. (அ)

# எலிசபெத் மகாராணியின் மறைவு; சபையில் 2 நிமிட மௌன அஞ்சலி!

கொழும்பு, செப். 10

தனது 96ஆவது வயதில் காலமான பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் நினைவாக இன்று காலை நாடாளுமன்றத்தில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

1952 ஆம் ஆண்டு முதல் 1972 ஆம் ஆண்டு வரை அப்போதைய சிலோன் குடியரசின் அரசியாக ஆட்சி செய்த அரசியின் நினைவாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவதற்கு பிரதமர் தினேஷ் குணவர்தன முன்மொழிந்தார்.

இதன்படி நேற்று காலை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய பாராளுமன்றம் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இங்கிலாந்தின் நீண்டகால மன்னரான இரண்டாம் எலிசபெத் ராணி, 70 ஆண்டுகள் ஆட்சி செய்த பின்னர், 96 வயதில் பால்மோரலில் இறந்தார்.

இதேவேளை, இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவை முன்னிட்டு அனைத்து பொது கட்டடங்களிலும் தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் ஏற்றுமாறு அறிவிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தேசிய துக்க காலம் பின்னர் அறிவிக்கப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மகாராணி இரண்டாம் எலிசபெத் மற்றும் பொதுநலவாய நாடுகளின் தலைவரின் மறைவு குறித்து ஜனாதிபதி விக்கிரமசிங்க, அரச குடும்பம், அரசாங்கம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் மக்களுக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார்.

1952 ஆம் ஆண்டு முதல் 1972 ஆம் ஆண்டு வரை இலங்கை அரசியாக செயற்பட்டவர் என ஜனாதிபதி தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# நாட்டின் முக்கிய தேயிலை ஏற்றுமதி நிறுவனம் வருடாந்தம் 300 மில்லியன் டொலர் வரி ஏய்ப்பு!

## மகிந்தானந்த அளுத்கமகே குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 10

இலங்கையின் பிரதான தேயிலை ஏற்றுமதி நிறுவனமொன்று வருடாந்தம் 300 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வரி ஏய்ப்பு செய்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் இந்த தகவலை வெளியிட்ட அவர், பல்பொருள் அங்காடிகளை நடத்தும் எந்தவொரு நிறுவனமும் ஒரு சதம் கூட வரி செலுத்துவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடாளாவிய ரீதியில் 48 விற்பனை நிலையங்களைக்



கொண்ட ஒரு பிரபலமான துணிக்கடையும் ஆண்டுதோறும் ரூ. 700 மில்லியன் சம்பாதிக்கும் ஆடை நிறுவனமும் வரி செலுத்துவதைத் தவிர்க்கின்றன.

ஸ்டேட் வங்கியில் 1.4 மில்லியன் ரூபாய் சம்பாதிக்கும் ஒரு குறிப்பிட்ட மூத்த அதிகாரியின் வரிகளை வங்கியே செலுத்துகிறது.

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் புதிய வரிக் கோப்புகளைத் திறக்க வேண்டும். இதன் மூலம் வரி செலுத்தாமல் ஏய்ப்பவர்களைக் கண்டுபிடிக்க முடியும்-என்றார். (அ)

# பழனிச்சாமி, பன்னீர்செல்வம், சசிகலா ஒன்றுசேர விடாமல் தடுக்க தி.மு.க. முயற்சி

## பலமான எதிரணியின்றி தேர்தலை எதிர்கொள்ள வகுக்கும் திட்டம்!



இந்தியாவில் 2024ல் நடக்கவுள்ள பாராளுடன்றத் (லோக்சபா) தேர்தலில், அ.தி.மு.க., தலைமையில் வலுவான அணி அமையக் கூடாது எனக் கருதும் தி.மு.க., பிரிந்து கிடக்கும் பழனிசாமி, பன்னீர்செல்வம், சசிகலா ஆகிய மூவரையும் ஒன்று சேர விடாமல் தடுக்க, புதிய வியூகம் வகுத்துள்ளது் சட்டரீதியாக மூவர் மீதும் தனித்தனியாக வழக்கு பதிந்து,



“செக்” வைக்கும் அஸ்திரத்தை கையில் எடுத்துள்ளது.

வரும் 2024ம் ஆண்டின் லோக்சபா தேர்தலில், தேசிய அளவில் பா.ஜ.க.,வை எதிர்கொள்ள பலமான எதிர்க்கட்சி இல்லாதது போல, தமிழகத்தில் தி.மு.க.,வை எதிர்கொள்ள வலுவான எதிர்க்கட்சி இருக்கக் கூடாது என, முதல்வர் ஸ்டாலின் கருதுகிறார்.

ஒற்றை தலைமை விவகாரம் தொடர்பாக பழனிசாமி, பன்னீர்செல்வம் என பிளவு பட்டுள்ள அ.தி.மு.க.,வுடன், சசிகலாவையும் இணைய விடாமல், தி.மு.க., தலைமை காய் நகர்த்தி வருகிறது. இது குறித்து, தி.மு.க., மூத்த நிர்வாகிகள் கூறியதாவது: “லோக்சபா தேர்தலில், தி.மு.க., வெற்றி பெற்றால் தான், 2026 சட்டசபை தேர்தலில் தி.மு.க., ஆட்சியை தக்க வைக்க முடியும்.

**நெருக்கடி**

பா.ஜ.க., வெற்றி பெற்றால், தி.மு.க., ஆட்சிக்கு நெருக்கடி ஏற்படும். அதை தவிர்க்கவே, அ.தி.மு.க., பலவீனமான கட்சியாக இருக்க வேண்டும் என, தி.மு.க., விரும்புகிறது. அதனால் தான், கோடநாடு ஜெயலலிதா பங்களா கொள்ளை, கொலை வழக்கு விவகாரத்தை, “அச்சத்தில் அ.தி.மு.க.,“ என்ற தலைப்பில், கட்சி பத்திரிகையில் தலையங்கமாக வெளியிட்டது. தலையங்கத்தில், “கோடநாடு கொலை, கொள்ளையில் எனக்கு எந்த தொடர்பும் கிடையாது. எந்த விசாரணைக்கும் நான் தயார் என, பழனிசாமி சொல்லியிருந்தால் பாராட்டலாம். ஆனால், அவர் கோடநாடு வழக்கை மீண்டும் விசாரிக்கக் கூடாது” என்கிறார்.

**தலையங்கம்**

“அவ்வழக்கை எத்தனை முறை விசாரித்தாலும் என்னை சிக்க வைக்க முடியாது. எனக்கும், இதற்கும் சம்பந்தமில்லை என்று தானே பழனிசாமி சொல்லியிருக்க வேண்டும். அப்படி அவரால் சொல்ல முடியவில்லை” என தலையங்கத்தில் எழுதப்பட்டுள்ளது. இதன் வாயிலாக, கோடநாடு விவகாரத்துடன் பழனிசாமியை தொடர்புபடுத்தி, அதை உயிரூட்டத்துடன் வைக்க தி.மு.க., திட்டமிட்டுள்ளது அம்பலமாகி உள்ளது.

**பன்னீருக்கும் சிக்கல்**

அ.தி.மு.க.,வில் ஒற்றைத் தலைமை விவகாரம் விஸ்வரூபம் எடுத்து, பழனிசாமி, பன்னீர்செல்வம் இடையே கருத்து மோதல் ஏற்பட்டது. அ.தி.மு.க., பொதுக்குழு கூட்டத்தை, ஜூலை 11ல் பழனிசாமி கூட்டினார். அன்றைய தினம், அ.தி.மு.க., தலைமை அலுவலகத்திற்கு பன்னீர்செல்வம், தன் ஆதரவாளர்களுடன் சென்றார். அப்போது, பழனிசாமி, பன்னீர்செல்வம் ஆதரவாளர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டு, கலவரமானது.

“பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் அ.தி.மு.க., அலுவலகத்திற்குள் அத்துமீறி புகுந்து, பொருட்களை திருடிச் சென்று விட்டனர்” என, முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் பொலிசில் புகார் அளித்தார். இந்த புகாரை அடுத்து, சி.பி.சி.ஐ.டி., விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த வகையில், பன்னீர்செல்வத்திற்கும், “செக்” வைக்கப்பட்டுள்ளது.

**சசிகலாவுக்கு என்ன பிரச்னை?**

ஜெயலலிதா மரணம் தொடர்பாக, நீதிபதி ஆறுமுகசாமி ஆணையத்தின் அறிக்கை வாயிலாக சசிகலாவுக்கும், “செக்” வைக்கப்பட்டுள்ளது. அதாவது, ஆணையத்தின் அறிக்கையில் சசிகலா, சிகிச்சை அளித்த டாக்டர் சிவகுமார், சுகாதாரத் துறை முன்னாள் அமைச்சர் விஜய பாஸ்கர், அப்போதைய தலைமை செயலர் ராமமோகன் ராவ் உள்ளிட்டோர் மீது, அரசு விசாரணைக்கு, பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், சட்ட நிபுணர்களின் ஆலோசனைகளை பெற்று எடுக்கும் நடவடிக்கைகளின் விபர அறிக்கையை, சட்டசபையில் தாக்கல் செய்ய, அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்படி பழனிசாமி, பன்னீர்செல்வம், சசிகலா ஆகிய மூவருக்கும் சட்டரீதியாக, “செக்” வைத்து, ஒன்றாக இணைய விடாமல் தனித்து செயல்பட வைத்து, லோக்சபா தேர்தலை சந்திக்க தி.மு.க., திட்டமிட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

(தினமலர்)

# நாணயம், முத்திரை தாளில் இனி ராஜாவின் படம்...!

## பிரித்தானிய தேசிய கீதத்தின் ஒரு வரியும் மாறுகிறது




ராணி எலிசபெத்தின் மறைவை அடுத்து அவரது புதல்வர் சார்ள்ஸ் நாட்டின் மன்னராகியிருக்கிறார். அவர் மூன்றாவது சார்ள்ஸ் மன்னர் (King Charles III) என அழைக்கப்படுவார். இதனால் இங்கிலாந்தின் முத்திரை, வங்கிப் பணத் தாள்கள் போன்றவற்றில் அரசியின் படம் படிப்படியாக நீக்கப்படும்.

மன்னர் சார்ள்ஸின் உருவம் அவற்றில் பொறிக்கப்படும். அதேபோன்று கடவுச்சீட்டு, பாதுகாப்புப் படையினரது சீருடை, தொப்பி என்பவற்றில் உள்ள அரசியைக் குறிக்கின்ற அடையாளங்களும் நீக்கப்பட வேண்டும். இவை அனைத்தும் ஒரே இரவில் நிகழ்ந்து விடாது. அதற்குச் சில காலம் எடுக்கும்.

பணத் தாள்கள், நாணயக் குற்றிகளில் மகாராணியின் முகம் வலது பக்கமாக நோக்கிய படி காணப்படும். மன்னரின் முகம் இனிமேல் இடது புறமாக நோக்கியபடி தோன்றும். 17 ஆம் நூற் றாண்டுகளின் மரபின்படி இந்த மாற்றம் பின்பற்றப்படுகிறது. சட்ட விடயங்களில் மன்னரால் நியமிக்கப்பட்ட பாரிஸ்டர்கள் மற்றும் வழக்குரைஞர்கள் தங்கள் பட்டம் குயின்ஸ் கவுன்சிலிடம் (QC) இருந்து கிங்ஸ் கவுன்சிலுக்கு (KC) மாறுவதைக் காணலாம்.




இதேபோன்று தேசிய கீதத்திலும் சிறு திருத்தமாக ”கடவுளே எங்கள் கருணையுள்ள மன்னரைக் காப்பாற்றுங்கள்” ('God save our gracious King') என்று ஒரு வரி மாற்றப்படுகிறது.

பிரிட்டிஷ் முடியாட்சியின் செல்வாக்குக்கு உட்பட்ட பொதுநலவாய நாடுகள் சிலவற்றின் நாணயங்களிலும் மன்னர் சார்ள்ஸின் உருவம் பொறிக்கப்படும். அவுஸ்திரேலிய நாணயங்களில் ஏற்கனவே இந்த மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் முக்கிய உறுப்பினர்களின் மரணங்களை அறிவிப்பதும் மரண சடங்குகளை எவ்வாறு நடத்துவது என்பதும் அவர்கள் உயிருடன் இருக்கும் போதே - முன்கூட்டியே - திட்டமிடப்பட்டு விடுகின்றன. அவற்றுக்குச் சில முக்கிய பாலங்களின் குறியீட்டுப் பெயர்களும் சூட்டப்படுகின்றன.

அந்த வகையில் மகாராணியின் மரணச் சடங்குகள் Operation London Bridge" என்ற பெயரில் ஏற்கனவே திட்டமிடப்பட்டு விட்டது. அதன் விவரங்கள் அண்மையில் வெளியாகி இருந்தன.

கடந்த ஆண்டு காலமாகிய மகாராணியின் கணவர் இளவரசர் பிலிப்பின் மரணச்சடங்கு நடைமுறைகள் "Operation Forth Bridge" என்ற குறியீட்டுப் பெயரால் அழைக்கப்பட்டன. தேசிய துக்கமும் இறுதி நிகழ்வுகளும் Operation Forth Bridge என்ற தலைப்பின் கீழேயே இடம்பெற்றன. Forth Bridge என்பது ஸ்கொட்லாந்தில் அமைந்துள்ள உலகப் புகழ் பெற்ற ரயில் பாலத்தின் பெயர்.

**- குமாரதாஸன்.**

# "இலங்கையில் எந்தவொரு மாகாண சபையிலும் தமிழர் பிரதம செயலராக இல்லை"

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ், இன பிரச்னைக்குத் தீர்வாகவும் தமிழர்களுக்காகவும் மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது. ஆனால், எந்தவொரு மாகாண சபையிலும் தமிழர் ஒருவர் பிரதம செயலாளராக இல்லை என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை (செப்ரெம்பர் 6) உரையாற்றிய அவர், தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கில், மாகாண சுகாதார பணிப்பாளராக தமிழர் ஒருவர் 5 வருடங்களாக கடமையாற்றி வந்த நிலையில், அண்மையில் அவர் பலாத்காரமாக அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, சிங்களவர் ஒருவர் அடாத்தாக அந்தப் பதவியைப் பெற்றுள்ளதாக குற்றம்சாட்டினார்.

"வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளராக சிங்களவர் உள்ளார். மின்சார சபையின் வடக்கு மாகாண பிரதி பொதுமுகாமையாளர் சிங்களவர், வடக்கிலுள்ள அத்தியட்சகர் பதவிகளிலுள்ள எல்லோரும் சிங்களவர்கள்" என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

"மாகாண சபை முறைமை ஏன் கொண்டு வரப்பட்டது? இலங்கையில் எங்காவது ஒரு மாகாண சபையில் - தமிழர் ஒருவர் பிரதம செயலாளராக இருக்கிறாரா? வடக்கு மாகாண பிரதம செயலாளராக பதவி வகிப்பவரை விடவும் - தொழில் மூப்புடைய பலர் வடக்கு மாகாணத்தில் உள்ளனர். ஆனாலும், தொழில் மூப்புக் குறைந்த ஒருவர் - பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்."

"வவுனியா அரசாங்க அதிபர் - சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர். ஆனால், அவரை விடவும் இலங்கை நிருவாக சேவையில் மூப்புடைய பலர் வடக்கில் இருக்கின்றனர். இருந்தபோதும் அந்தப் பதவியை தமிழர்களுக்கு கேட்டால் வழங்குவதில்லை" என அவர் தனது உரையில் கூறியுள்ளார்.

"இலங்கையில் இன பிரச்னையைத் தீர்ப்பதற்காகவும், நீதி வழங்குவதற்காகவும் தமிழர்களுக்காக மாகாண சபை முறைமை கொண்டு வரப்பட்டது. சிங்களவர்கள் மாகாண சபை முறைமையை கேட்கவில்லை. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் தமிழர்களுக்காகத்தான் மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது. அவ்வாறு கொண்டுவரப்பட்ட மாகாண சபைகளில் அதிகாரங்கள் யார் வசம் உள்ளன?

"தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற இடங்களில் அவர்களுடைய மொழி, நிலம், கலாசாரம் போன்றவற்றை அடிப்படையாக வைத்து, அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் என்பது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது" எனவும், நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது குறிப்பிட்டார்.

80 வருடங்களாக இந்த நாட்டில் இருந்து வரும் இன பிரச்னைக்குத் தீர்வு பெறப்படாமல், இங்கு பொருளாதாரத்திலும் வளர முடியாது, போசாக்கிலும் வளர முடியாது எனவும் அவர் தனது உரையில் கூறினார்.

1987ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில்,




அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தத்தின் கீழ், மாகாண சபை முறைமை 1988ஆம் ஆண்டு இலங்கையில் உருவாக்கப்பட்டது.

ஆரம்பத்தில் ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொரு "மாகாண சபை" உருவாக்கப்பட்ட போதிலும், தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தற்காலிகமாக இணைக்கப்பட்டு, "வட கிழக்கு மாகாண சபை" உருவாக்கப்பட்டதோடு, 1988ஆம் ஆண்டு அந்த மாகாண சபை"க்கான தேர்தல் நடத்தப்பட்டது.

பின்னர் உச்ச நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கிணங்க வடக்கு - கிழக்கு மாகாணங்களின் தற்காலிக இணைப்பு 2007ஆம் ஆண்டு ரத்துச் செய்யப்பட்டது. இதன் காரணமாக வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகண சபைகளாகின.

இதனையடுத்து 2008ஆம் ஆண்டு கிழக்கு மாகண சபைக்கான தேர்தல் முதன் முதலாக நடத்தப்பட்டது. ஆயினும் வடக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தல் 2013ஆம் ஆண்டுதான் நடைபெற்றது.

இந்த வகையில் இலங்கையில் 09 மாகாணங்களுக்குமென, 09 மாகாண சபைகள் உள்ளன. இவை அனைத்தினதும் பதவிக் காலங்கள் நிறைவடைந்தமையினால், அனைத்து மாகாண சபைகளும் கலைக்கப்பட்டு - அவற்றின் நிருவாகங்கள், மாகாண ஆளுநர்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.




**தமிழர் எவரும் பிரதம செயலாளர்களாக இல்லை**

நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கூறியமை போன்று, தற்போது இலங்கையினதும் எந்தவொரு மாகாண சபையினதும் பிரதம செயலாளர்களாக தமிழர்களோ அல்லது முஸ்லிம்களோ இல்லை.

ஆனால், கடந்த காலங்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளின் பிரதம செயலாளர்களாக தமிழர்கள் பதவி வகித்துள்ளனர்.

உதாரணமாக வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் பதவியில் பத்திநாதன், விஜயலட்சுமி மற்றும் ரங்கராஜா போன்றோர் இருந்ததாக இலங்கை நிருவாக சேவையிலுள்ள மூத்த அதிகாரி ஒருவர் பிபிசி தமிழிடம் தெரிவித்தார். இவர் தனது அடையாளத்தை வெளியிட வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார்.

அதேபோன்று இணைந்த வடகிழக்கு மாகாண சபையில் கிருஷ்ணமூர்த்தி,



கிழக்கு மாகாண சபையில் பால கிருஷ்ணன் மற்றும் கணேசநாதன் ஆகியோரும் பிரதம செயலாளர் களாகப் பதவி வகித்துள்ளனர் எனவும், அந்த அதிகாரி குறிப் பிட்டார்.

**மாகாண சபை பிரதம செயலாளர் பதவி என்றால் என்ன?**

மாகாண சபையொன்றின் நிருவாகத்துக்கு அச் சபையின் பிரதம செயலாளர் பொறுப்பாக இருக்கின்றார். இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

பிரதம செயலாளரின் கீழ் - சில செயலாளர்களும் பிரதிப் பிரதம செயலாளர்களும் பணியாற்றுகின்றனர்.

அந்த வகையில் பிரதம செயலாளரின் கீழ் - முதலமைச்சின் செயலாளர், சுகாதார அமைச்சின் செயலாளர், கல்வியமைச்சின் செயலாளர், விவசாய அமைச்சின் செயலாளர், மாகாண சபை செயலாளர் மற்றும் ஆளுநரின் செயலாளர் ஆகியோரும். நிதிக்கான பிரதிப் பிரதம செயலாளர், திட்டமிடலுக்கான பிரதிப் பிரதம செயலாளர், பொறியியல் துறைக்கான பிரதிப் பிரதம செயலாளர், நிருவாகத்துக்கான பிரதிப் பிரதம செயலாளர் மற்றும் ஆளணி மற்றும் பயிற்சிக்கான



பிரதிப் பிரதம செயலாளர் ஆகியோரும் பணியாற்றுகின்றனர்.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாகவுள்ள வடக்கின் - மாகாண சபையினுடைய பிரதம செயலாளராக சிங்கள சமூகத்தைச் சேர்ந்த எஸ்.எம். சமன் பந்துலசேன என்பவர் பதவி வகிக்கின்றார். அதேபோன்று தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கின் மாகாண சபையின் பிரதம செயலாளராக சிங்கள சமூகத்தைச் சேர்ந்த துசித பி வணிகசிங்க பணியாற்றுகின்றனர்.

**"இனவாத அடிப்படையிலான செயல்"**

இந்த நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் முன்வைத்த குற்றச்சாட்டு குறித்து - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கே.எம். ஜவாத், கருத்து தெரிவிக்கையில், "தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் - வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு சேவை மூப்புக் குறைந்த சிங்களவர்கள் பிரதம செயலாளர்களாக நியமிக்கப்படுகின்றமை இனவாத அடிப்படையிலான செயற்பாடாகும்," என்கிறார்.

இலங்கை நிருவாக சேவையில் - நீண்ட கால சேவை மூப்பைக் கொண்ட தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கும் நிலையில், அவர்களை விடவும் குறைந்த சேவை மூப்பைக் கொண்ட சிங்களவர்கள் நியமிக்கப்படுவது நியாயமற்றது எனவும் அவர் கூறினார்.

"வவுனியா அரசாங்க அதிபராக கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் ஐ.எம். ஹனீபா என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் 30 ஆண்டுகளுக்குப் பின்னர் முஸ்லிம் சமூகத்திலிருந்து அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், ஆட்சிக்கு வந்த கோட்டாபய அரசாங்கம் அவரை அந்தப் பதவியிலிருந்து நியாயமற்ற வகையில் நீக்கியது. அதுமட்டுமன்றி, அவரை விடவும் நிருவாக சேவையில் குறைந்த அனுபவத்தைக் கொண்ட சிங்களவர் ஒருவரை, அந்தப் பதவிக்கு கோட்டாபய அரசாங்கம் நியமித்தது. இப்படி, தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நீண்டகாலமாகவே அநீதியிழைக்கப் பட்டு வருகிறது" எனவும் ஜவாத் கூறினார்.

தகுதியானவர்களுக்கு அரச சேவையில் முக்கிய பதவிகள் வழங்கப்படுவதை விடவும், இனரீதியாகவே வழங்கப்படுவதாக தெரிவித்த ஜவாத் இந்த நிலை மாற வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றார்.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


● 1, 2 ஆகிய வினாக்களில் முதலில் தரப்பட்ட பகுதியைப் பூரணப்படுத்துவதற்குரிய மீதிப்பகுதியைத் தெரிவு செய்க.

01. வண்ணத்துப்பூச்சியின் ஒருபகுதி முன்னே தரப்பட்டுள்ளது.



(1) (2) (3)

02.



(1) (2) (3)

03. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை மூன்று கூட்டங்களாகப் பிரிக்கலாம்.



A B C D E F

இக் கூட்டங்களைச் சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A, C / D, E / B, F

(2) A, E / B, C / D, F

(3) C, F / B, D / A, E

04. **“பல்கலைக்கழகம்”** எனும் சொல்லிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஆக்கக் கூடிய சொற்களைக் கொண்ட விடைத் தொகுதி எது?

(1) பல், பழம், பகல், கழகம், காலை, கல், பாகல்

(2) பல், கல்வி, பகல், கழகம், கலை, கல், பக்கம்

(3) பல், பழம், பகல், கழகம், கலை, கல், பக்கம்


05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.

(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.



(1) (2) (3)

07. உலக மரபுரிமை மையங்களாக ......................... நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், ............................... போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.

(1) யுனிசெப், காலிக்கோட்டை

(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை


(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

## விடைகள்

01. (3)



02. (1)



03. (3) C, F / B, D / A, E

---

**கல்வி tv CHANNEL-1**

**10.09.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

**கல்வி tv CHANNEL - 2**

**10.09.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் வியாபாரம்!

## பொலிஸ் அத்தியட்சகர் எச்சரிக்கை

அம்பாறை, செப். 10

“நாட்டில் மிக மோசமாக ஊடுருவியுள்ள போதைப்பொருள் வியாபாரம் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து இன்று சமூகத்தில் ஊடுருவி வருகின்றது. எனவே, பெற்றோர், மிக விழிப்புடன் செயற்படவேண்டும்.”

-இவ்வாறு, கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரி.எச்.டி.எம். எல்.புத்திக கூறினாரர்.

இலங்கையில் பொலிஸ் சேவையின் 156 ஆவது நிறைவையொட்டிய பொலிஸ் வார நிகழ்வின் ஓரங்கமாக நிந்தவூர் அல்-மஸ்லம் வித்தியாலயத்தில் இடம்பெற்ற வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நிந்தவூர் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டிலும், பெஸ்ட் ஒப் யங் நிறுவன அனுசரணையுடனும் நிகழ்வு நடைபெற்றது.

நிந்தவூர் பொலிஸ் நிலையபதில் பொறுப்பதிகாரியும், பிரதான பொலிஸ் பரிசோதகருமான எம்.எம்.அஷ்ரப் தலைமையில் நடைபெற்ற நிகழ்வு வித்தியாலய அதிபர் இஸ்ட். அகமதின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகியது.

நிகழ்வில் நிந்தவூர் பொலிஸ் ஆலோசனைக்குழுவின் தலைவரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான எம்.ஏ.எம்.றசீன் உட்பட கல்வி அதிகாரிகள், முக்கியஸ்த்தர்கள் பலரும் விசேட அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் புத்திக நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றுகையில்-

நாட்டையும், மக்களையும் பாதுகாத்து சட்டம் ஒழுங்கை நேர்த்திபெறச் செய்துள்ள பொலிஸ் சேவை இன்று 156 வருடங்களை நிறைவு செய்த பெருமிதத்தில் திழைத்து நிற்கின்றது.

நாட்டில் புரையோடிப் போன முப்பது வருட யுத்த காலத்தைக் கடந்து நிம்மதிப் பெரு மூச்சு விட்டுள்ள நிலையில் அதைவிடவும் மோசமான யுத்தத்திற்கு நாம் முகம்கொடுத்து எமது வருங்காலச் சந்ததியினரைப் பாதுகாக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்

நவீன இலத்திரனியல் ஊடகப் பயன்பாடு, செல்போன்கள் பாவனை எம் இளம் சந்ததியினரைக் கெட்ட வழிகளில் கவர்ந்திழுக்கும் அதேவேளை இன்று நாட்டில் வேரூன்றிவரும் போதைப் பொருள் பாவனையும் எமக்கு இன்று சவாலாக மாறியுள்ளன.

குறிப்பாக சமூகத்தில் போதைப்பொருள் பாவனை கோரத்தாண்டவமாட முனைந்துள்ள நிலையில், போதைப் பொருள் பாவனையை சமூகத்திலிருந்து ஒழித்துக்கட்ட வேண்டிய யுத்தம் இன்று முதன்மை பெற்றுள்ளது.

அதிலும் பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்ட போதைப்பொருள் வியாபாரம் விஸ்பரூபமெடுக்காதவாறு விழிப்புடனான செயற்பாடுகளை நாம் முன்னெடுகக் வேண்டிய நிலைக்குவந்துள்ளோம்.

குறிப்பிட்ட சில மணி நேரங்களே பாடசாலைகளில் மாணவர்களுள்ளபோதும், பெரும்பாலான நேரங்கள் பெற்றோருடன் வீடுகளிலேயே தங்கியுள்ளனர்.

எனவே, பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தொடர்பில் மிகுந்த கரிசனை கொள்ளவேண்டும்.

குறிப்பாக போதைவஸ்து பாவனை, விற்பனை தொடர்பில் இலக்கு வைக்கப்பட்டுள்ள மாணவ சமுதாயத்தை நாம் பெரிதும் பாதுகாக்க வேண்டும். வழிதவறும் நிலைக்கு மாணவ சமுதாயம் தள்ளப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

முக்கியமாகப் பெற்றோர் தமது ஆசைகளை மட்டும் நிறைவேற்றுவதற்கு மாணவர்களைக் கட்டாயப்படுத்தாது, அவர்களுக்கு ஆர்வமுள்ள துறைகளில் திறமைகளை வளர்த்து விட வேண்டும்-என்றார்.(அ-06)





# மண்டூர் தொடக்கம் வெருகல் வரை இந்து சமய ஆன்மீக பாதயாத்திரை!

## நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பம்

மட்டக்களப்பு, செப். 10

**மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை நடாத்தும் மண்டூர் தொடக்கம் வெருகல் வரை இந்து சமய ஆன்மீக பாதயாத்திரை மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.**

திருகோணமலை-மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் அமைந்துள்ள வெருகல் சித்திர வேலாயுத ஆலய வருடாந்த உற்சவத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையால் ஆன்மீக பாத யாத்திரை இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீ. யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற ஆன்மீக பாத யாத்திரையில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இருந்து பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது ஆன்மீக பாத யாத்திரையில் கலந்து கொண்ட பக்தர்கள் கையில் நந்திக்கொடி ஏந்தி அரோகரா கோசத்துடன் செல்லும் வீதியிலுள்ள ஆலயங்களை தரிசித்து செல்கின்றனர்.

மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமான ஆன்மீக பாத யாத்திரை எதிர்வரும் வியாழக்கிழமை மாலை வெருகல் சித்திரவேலாயுத ஆலயத்தினை சென்றடையவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

குறித்த யாத்திரையானது செட்டிபாளையம் கண்ணகி அம்மன் ஆலயம், மாமாங்கேஸ்வரர் ஆலயம், சித்தாண்டி சித்திரவேலாயுதர் ஆலயம், வாழைச்சேனை புதுக்குடியிருப்பு ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயம், மாங்கேணி செல்வ விநாயகர் ஆலயம், வாகரை செல்வ விநாயகர் ஆகிய ஆலயங்களில் இரவு வேளையில் தங்கியிருந்து வெருகல் சித்திரவேலாயுதர் ஆலயத்தினை சென்றடையவுள்ளது.

எனவே அனைத்து இந்து அடியார்களையும் கலந்து கொள்ளுமாறு அன்பாக அழைப்பதாக மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் கூறினார்.

(அ)

# தேசிய பண்டிகைகளை பல்கலைக்கழகங்களில் கொண்டாடுவது நல்லிணக்கத்துக்கு வழிகோலும்

## தென்கிழக்கு பல்கலை துணைவேந்தர் றமீஸ் அபூபக்கர்

அம்பாறை, செப். 10

தேசிய ஒற்றுமையை மேம்படுத்தும் வகையில் சமூக, கலாசார நடவடிக்கைகள், ஆராய்ச்சி மற்றும் சமூக நல்லிணக்கத் துறைகளில் அறிவைப் பரப்புவதன் மூலம் சமூக நல்லிணக்கத்தை வழங்குவதில் பல்கலைக்கழக சமூகத்தை சிறந்து விளங்கச் செய்தல் வேண்டும். தேசிய சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தலைவர்களை உருவாக்கும் மையமாக பல்கலைக்கழகங்கள் திகழ வேண்டுமென தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

சமூக நல்லிணக்க மையத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக கல்வி சமூகத்துடன் உரையாடல்” எனும் நிகழ்வு மையத்தின் பணிப்பாளர் கலாநிதி எம்.பைறோஸ் தலைமையில் கலை, கலாசார பீட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சமூக நல்லிணக்க மையத்தின் பதாதையினை திறந்து வைத்தார்.

இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் உரையாற்றுகையில், எமது



பல்கலைக்கழகத்தின் சமூக நல்லிணக்கக் கொள்கையானது திறனை மேம்படுத்துதல், ஆராய்ச்சி வெளியீடு மற்றும் பிற நடவடிக்கைகளில் பல்கலைக் கழகத்திற்கு வழிகாட்டும் ஒரு கட்டமைப்பை உருவாக்குவதாகும். தைப்பொங்கல், தமிழ், சிங்கள புத்தாண்டு, வெசாக், ரமழான் இப்தார், தீபாவளி, கிறிஸ்மஸ் போன்ற தேசிய பண்டிகைகளை பல்கலைக் கழகங்களில் கொண்டாடுவது தேசிய நல்லிணக்கத்திற்கு வழிகோளும் நிகழ்வுகளாகும்.

நல்லிணக்கத்தை மையப்படுத்தி ஓவியம், கலை, கலாச்சார கண்காட்சிகள் போன்றவற்றை நடத்துதல்,மோதல், அமைதி மற்றும் நல்லிணக்கம் குறித்த தேசிய மற்றும் சர்வதேச மாநாடுகளை நடத்துதல் வேண்டும். இலங்கைப் பல்கலைக்கழகங்களின் உறுப்பினர்கள் மற்றும் ஆசிரிய மட்டத்தில் மாணவர்களின் ஈடுபாட்டுடன் நடத்தப்படும் சமூக நல்லிணக்கம் மற்றும் சமாதான ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளை வெளியிட மும்மொழி இதழை உருவாக்குதல் மற்றும் நல்லிணக்கத்தைக் குறிக்கும் நடனம், நாடகம் மற்றும் இசை நிகழ்ச்சிகளை ஊக்குவிக்க வேண்டும்-என்றார்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக கலை, கலாச்சார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில், துறைத்தலைவர் பேராசிரியர் எம்.பௌஸர், பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், விரிவுரையாளர்கள், உயர் அதிகாரிகள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் சிறப்பு பேச்சாளராக, “கலைச் செயற்பாட்டில் பண்பாட்டு பன்மைத்துவம்” என்ற தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக, சிரேஷ்ட விரிவுரையாளர், எஸ். சந்திரகுமார் சிறப்புரையாற்றினார்.

(அ)

# பிரிட்டன் மகாராணியின் இறப்புக்கு உலக நாடுகளின் பிரபல பத்திரிகைகள் வழுங்கியுள்ள முக்கியத்துவம்!




























லண்டன், செப். 10

பிரித்தானிய மகாராணி யின் இறப்பிற்கு உலக நாடுகளிலுள்ள பிரபல பத்திரிகைகள் தமது ஆழ்ந்து அனுதாபங்களை தெரி வித்து முதற் பக்கத்தில் செய்தி பிரசுரித்துள்ளன.

மகாராணிக்கு மரியாதை செலுத்தும் வகையில் முன்னணி செய்தித் தாள்கள் இந்த கருத்தை வெளியிட் டுள்ளன.

தி டைம்ஸ், டெய்லி மெய்ல், தி டெய்லி டெலி கிராப், தி சன் போன்ற செய்தித்தாள்கள் மகாராணியின் மரணம் குறித்து தமது இரங்கலை முதல் பக்கத்தில் வெளியிட்டுள்ளன.

பிரித்தானிய மகாராணி இரண் டாம் எலிசபெத் நேற்று ஸ்கொட் லாந்தின் பால்மோ ரலில் காலமானார்.

இந்த நிலையில் அவரின் மூத்த மகனான இளவரசர் சார்ள்ஸ் மன்னராக நியமிக்கப்பட்டுள்ளார். (அ)




## புதிய அரசராகிறார் சார்ள்ஸ்



லண்டன், செப். 10

இங்கிலாந்து மகாராணி 2ஆம் எலிசபெத் தனது 96 ஆவது வயதில் நேற்று முன் தினம் உயிரிழந்தார்.

ஸ்கொட்லாந்தில் உள்ள பால்மோரல் பண்ணை வீட்டில் ராணி 2ஆம் எலிசபெத் உயிரிழந்ததாக பக்கிங்காம் அரண்மனை தெரிவித்துள்ளது.

மகாராணி 2ஆம் எலிசபெத் உயிரிழந்ததையடுத்து இங்கிலாந்தின் புதிய அரசராக இளவரசர் சார்ள்ஸ் அரியணை ஏறியுள்ளார்.

சார்ள்ஸ் பிலிப் அர்துர் ஜோர்ஜ் என்ற இயற்பெயர் கொண்ட 3ஆம் சார்ள்ஸ் உயிரிழந்த 2ஆம் எலிசபெத்தின் மூத்த மகன் ஆவார்.

73 வயதான சார்ள்ஸ் இங்கிலாந்தின் புதிய அரசராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

இவர் அரியணை ஏறும் விழா விரைவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் தனது முதல் மனைவியான இளவரசி டயானாவை 1996ஆம் ஆண்டில் விவாகரத்து செய்தார்.

இதனை தொடர்ந்து டயானா 1997இல் சாலை விபத்தில் உயிரிழந்தார். அவரது மரணத்தில் தற்போதும் மர்மம் நீடித்து வருகிறது.

இதனை தொடர்ந்து 2005 ஆம் ஆண்டு கமிலா என்பவரை சார்ள்ஸ் 2ஆவது திருமணம் செய்துகொண்டார்.

இங்கிலாந்தின் புதிய அரசராக சார்ள்ஸ் அரியணை ஏற உள்ள நிலையில் ராணியாக கமிலா அரியணை ஏறுகிறார்.

பிரிட்டன் ஆட்சி காலத்தில் இந்தியாவில் இருந்து கொண்டு செல்லப்பட்ட கோஹினூர் வைரத்தால் செய்யப்பட்ட கீரிடம் இனி கமிலா வசம் செல்ல உள்ளது. (அ)

## ஈபிள் கோபுரம் விளக்கணைத்து பிரிட்டிஷ் மகாராணிக்கு அஞ்சலி

பாரிஸ், செப். 10

பேரரசி இரண்டாம் எலிசபெத்தின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பாரிஸ் நகர ஈபிள் கோபுரத்தின் மின் விளக்குகள் நேற்றுமுன்தினம் இரவு அணைக்கப்பட்டன.

பாரிஸ் நகரம் ஐக்கிய ராச்சிய மக்களுடன் துயரத்தைப் பகிர்ந்துகொள்கிறது என்று பாரிஸ் நகர மேயர் ஆன் கிடல்கோ தனது ருவீற்றர் பதிவில் தெரிவித்திருக்கிறார். அதேசமயம் எலிஸே மாளிகையின் பிரதான வாயிலில் ஐக்கிய ராச்சியக் கொடி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. அதிபர் எமானுவல் மக்ரோன் விடுத்துள்ள துயர் பகிர்வுச் செய்தி ஒன்றில் பேரரசியை பிரெஞ்சு மக்களின் மனங்களில் நிலையான இடம் பிடித்த ”இதயங்களின் ராணி” என்று குறிப்பிட்டிருக்கிறார்.

”மாட்சிமை தாங்கிய ராணி இரண்டாம் எலிசபெத் 70 ஆண்டுகளுக்கும் மேலாக பிரிட்டிஷ் தேசத்தின் நீட்சியையும் ஒற்றுமையையும் தன்னகத்தே கொண்டவர். பிரான்ஸின் உற்ற நண்பராக அவரை நான் நினைவில் கொள்கிறேன், தனது தேசத்தையும் தனது நூற்றாண்டையும் அடையாளமாகக் கொண்ட இதயங்களின் ராணி அவர்” - என்று மக்ரோன் தனது ருவீற்றர் பதிவில் எழுதியுள்ளார்.

எலிஸே மாளிகையிலும் நாட்டின் அரசுக் கட்டடங்களிலும் நேற்று வெள்ளிக்கிழமை முதல் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.



அதேசமயம் அமெரிக்காவில் வெள்ளை மாளிகை, பாராளுமன்றக் கட்டடம் உட்பட உலகெங்கும் உள்ள முக்கிய கட்டடங்களிலும் நினைவுச் சின்னங்களிலும் தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில் விடப்பட்டுப் பேரரசியின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய ராச்சியத்தில் பத்து நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படும். எலிசபெத்தின் உடல் நீண்ட பவனிகளில் எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் அஞ்சலியின் பின்னர் பத்தாவது நாள் அடக்கம் செய்யப்படும். (அ)

## அணு ஆயுத நாடாகத் தன்னை பிரகடனம் செய்த வடகொரியா!

பியொங்யாங், செப். 10

அணு ஆயுத நாடாக வடகொரியா தன்னை பிரகடனம் செய்துள்ளது. இதற்கான சட்டத்தை நிறைவேற்றியுள்ளதாக அந்நாட்டு அரச செய்தி நிறுவனமான கே.சி.என்.ஏ. தெரிவித்துள்ளது.

இதன்படி, அணுவாயுதக் கொள்கையைக் கைவிடக் கோரும் எந்தப் பேச்சுவார்த்தைகளும் இனிச் சாத்தியம் இல்லை என வடகொரியத் தலைவர் கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார்.

வடகொரியா நிறைவேற்றியுள்ள புதிய சட்டத்தின்படி வட கொரியா தன்மை பாது காத்துக்கொள்ள அணுவாயுத தாக்குதலை நடத்த முடியும்.

வடகொரியாவின் அணுவாயுத திட்டங்களுக்கு எதிராக சர்வதேச நாடுகள் கடும் பொருளாதாரத் தடைகளை விதித்திருந்த போதும் 2006 முதல் 2017 வரையிலான காலப்பகுதியில் அந்நாடு ஆறு அணு ஆயுத சோதனைகளை நடத்தியது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை தீர்மானங்களை மீறும் வகையில் வட கொரியாவின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. அத்துடன், அண்டை நாடுகளை அச்சுறுத்துவதுடன், அமெரிக்க நிலப்பரப்பை தாக்குதல் அளவுக்கு அதன் இராணுவத் திறனை வட கொரியா வளர்த்துள்ளது.

2019 ஆம் ஆண்டில் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் வடகொரிய தலைவர் கிம் ஜோங் உன் இடையே அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் தொடர்பில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற போதும் அதில் எந்த இறுதி முடிவும் எடுக்கப் படவில்லை.



இதனைத் தொடர்ந்து நீண்ட தூரம் சென்று இலக்குகளைத் தாக்கும் ஏவுகணை மற்றும் அணுசக்தி சோதனைகளை வடகொரியா மேற்கொண்டது.

தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி பைடன் தலைமையிலான நிர்வாகம் வட கொரியாவுடன் பேச ஆர்வமாக உள்ள போதும், இதனை வட கொரியா தட்டிக்கழித்து வரு கிறது.

கடந்த ஆண்டு வட கொரியா தொடர்பான தனது கொள்கையை அமெரிக்கா மீளாய்வு செய்தது. கொரிய தீபகற்பத்தில் முழு அணு ஆயுத ஒழிப்பே தமது இலக்கு என்று அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியது. இதற்கான முயற்சிகளைத் தொடரவுள்ளதாக பைடன் தெரிவித்தார்.

இதற்கிடையில், கொரிய தீபகற்பத்தில் இந்த ஆண்டு பதற்றம் மேலும் அதிகரித்தது, சாதனை எண்ணிக்கையிலான பாலிஸ்டிக் ஏவுகணைகளை வடகொரியா ஏவியது.

இதனைத் தொடர்ந்து தென் கொரியாவும் அமெரிக்காவும் இணைந்து மிகப்பெரிய கூட்டு இராணுவப் பயிற்சிகள் மூலம் பதிலடி கொடுத்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)




# விராட் கோலி சதம் இந்தியா வெற்றி!

டுபாய், செப். 10

ஆசிய கிண்ண இருபது -20 கிரிக்கெட் தொடரில் ஆப்கானிஸ்தான் அணியை வீழ்த்தியுள்ளது இந்திய அணி. இந்தப் போட்டியில் 1019 நாளுக்கு சதம் விளாசி னார் இந்திய அணியின் விராட் கோலி.

ஆசிய கிண்ண இருபது - 20 கிரிக்கெட் தொடரில் இறுதிப்போட்டிக்குள் நுழையும் வாய்ப்பிலிருந்து இந் திய அணி ஏற்கனவே வெளியேறிவிட்டது. சம்பிரதாய மோதலாக நேற்று இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின.

ரோஹித்துக்கு பதிலாக கே. எல். ராகுல் அணித் தலைவராக செயல்பட்டார். நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கான் அணித்தலைவர் முகமது நபி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

இந்திய அணியின் தொடக்க வீரர்களாக ராகுலு டன் கோலி களமிறங்கினார்.

தங்கள் தகுதியை நிரூபிக்க வேண்டிய கட்டா யத்தில் இறங்கிய கே. எல். ராகுல் மற்றும் கோலி இருவருமே ஆரம்பத்தில் மெதுவான துடுப்பாட்டத்தை வெளிப் படுத்தினாலும், போகப்போக அதிரடி காட்டினர். ஆப்கான் பந்துவீச்சாளர் ப்ருக்கி ஓவரில் பௌண்ட்ரி களை விளாசி இருவரும் அணியின் ஓட்ட எண்ணிக் கையை அதிவேகமாக உயர்த்த, அதிலிருந்து இருவரின் அதிரடியும் அதிகமானது.
இந்தக் கூட்டணி நாலாபுற மும் பௌண்ட்ரி, சிக்ஸர் களாக விளாசியது.

இருவரும் அரைச்சதம் கடந்த நிலையில், 13ஆவது ஓவரிலேயே இவர்கள் கூட்டணியை பிரிக்க முடிந்தது. 62 ஓட்டங்கள் குவித்த ராகுல் முதல் விக்கெட்டாக வெளியேறிய, அடுத்துவந்த சூர்யகுமார் யாதவ் ஒரு சிக்ஸரை மட்டும் விளாசி அடுத்த பந்திலேயே ஆட்ட மிழந்தார். என்றாலும், ரிஷப் பந்துடன் இணைந்து விராட் கோலி தனது அதிரடியை தொடர்ந்தார்.

1019 நாள்களுக்குப் பிறகு சர்வதேச களத்தில் தனது சதத்தை பதிவு செய்தார். கோலியின் கிரிக்கெட் வரலாற் றில் இது 71ஆவது சதமாகும். அதேநேரம், இருபது -20 கிரிக்கெட்டில் இதுவே விராட் கோலிக்கு முதல் சதம் ஆகும். சதம் எடுத்த பின்பும் அதிரடியாக ஆடிய கோலி, கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்து மொத்தம் 61 பந்துகளை சந்தித்து 122 ஓட்டங்களைக் குவித்தார். அதேநேரம், 20 ஓவர்கள் முடிவில் 212 ஓட்டங்கள் என்ற இமாலய ஓட்ட எண்ணிக்கையை எட்டியது இந்திய அணி.

மிகப்பெரிய இலக்கை துரத்திய ஆப்கான் அணிக்கு ஹஜ்ரத்துல்லாஹ் ஜசைல் மற்றும் ரஹ்மானுல்லா குர்பாஸ் இருவரும் தொடக்கம் கொடுத்தனர்.

முதல் ஓவரின் 4ஆவது பந்திலேயே ஜசைல்லை புவனேஷ்வர் குமார் வெளியேற்றி ஆப்கான் அணிக்கு அதிர்ச்சி கொடுத்தார். அதற்கடுத்த பந்தில் குர்பாஸை யும் ஆட்டமிழக்க செய்ய, முதல் ஓவர் முடிவிலேயே இரண்டு விக்கெட்களை இழந்து தடுமாறியது ஆப்கான். புவனேஷ்வர் குமார் தனது அதிரடியான பந்துவீச்சை கைவிடவில்லை. இதனால், ஆப்கான் வீரர்கள் ஒவ்வொருவராக விக்கெட்டை பறிகொடுத் தனர்.

மூன்றாவது வீரராக இறங்கிய இப்ராஹிம் ஜர்தான் தவிர மற்ற வீரர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். இப்ராஹிம் கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்து 64 ஓட்டங்கள் சேர்த்தார். இறுதியில் 20 ஓவர்கள் முடி வில் 8 விக்கெட் இழப்புக்கு 111 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது அந்த அணி.

இந்திய தரப்பில் புவனேஷ்வர் குமார் அதிகபட்ச மாக ஐந்து விக்கெட்கள் வீழ்த்தினார். இதன்மூலம், 101 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

# ஒரே ஒரு போட்டி; கோலி 9 சாதனை!

டுபாய், செப். 10

சர்வதேச கிரிக்கெட்டில் இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோலி எடுக்கும் ஒவ்வொரு ஓட்டமுமே சாதனைக் கற்களாக மாறி வருகின்றன. அந்த வகையில் நடப்பு ஆசிய கிண்ணத் தொடரில் ஆப்கான் அணிக்கு எதிராக அவர் பதிவு செய்த சதம் பல்வேறு சாதனை களை தகர்த்தும், புதிய மைல்கற்களை அடையவும் செய்துள்ளது. அது குறித்து முழுமையாகப் பார்ப்போம்.

கிட்டத்தட்ட 3 ஆண்டுகளுக்குப் பிறகு கோலி தனது முதல் சதத்தைப் பதிவு செய்துள்ளார். டுபாயில் தனது சர்வதேச சதத்தின் வறட்சியை போக்கியுள்ளார். 61 பந்துகளில் 122 ஓட்டங்களை விளாசி இருந்தார். சர்வதேச இருபது -20 கிரிக்கெட்டில் அவர் பதிவு செய்துள்ள முதல் சதம் இது.

இதன்மூலம் அவர் தகர்த்துள்ள சில சாதனைகள், எட்டியுள்ள மைல்கற்கள்,

சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் அதிக ஓட்டங் கள் எடுத்த இந்திய வீரர் ஆகியுள்ளார் விராட். இதன் மூலம் ரோஹித் சர்மாவை அவர் முந்தியுள்ளார். ரோஹித் இருபது -20 கிரிக்கெட்டில் அதிகபட்சமாக 118 ஓட்டங்களை இலங்கைக்கு எதிராக எடுத்துள்ளார்.

ரெய்னா, ரோஹித், ராகுல் என வரிசையில் உள்ள வீரர்களுக்கு அடுத்ததாக மூன்று வடிவிலும் சதம் பதிவு செய்த இந்திய வீரர் என்ற மைல்கல்லை எட்டியுள்ளார் கோலி.

சர்வதேச இருபது -20 கிரிக்கெட்டில் சதம் விளாசிய ஆறாவது இந்திய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

முன்னாள் அவுஸ்திரேலிய அணித் தலைவர் றிக்கி பொண்டிங் சர்வதேச கிரிக்கெட்டில் 71 சதங்களை




விளாசியுள்ளார். அதனை சமன் செய்துள்ளார் கோலி.

அதிக சதங்கள் விளாசிய வீரர்களில் இரண்டாவது இடத்தில் உள்ளார். முதலிடத்தில் 100 சதங்களுடன் டெண்டுல்கர் உள்ளார்.

சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் 100 சிக்ஸர் களை விளாசிய இரண்டாவது இந்திய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் 3500 ஓட்டங் களை கடந்த இரண்டாவது துடுப்பாட்ட வீரராகவுள்ளார் கோலி.

மூன்று வடிவங்களையும் சேர்த்து 24, 000 சர்வதேச ஓட்டங்களை எடுத்த ஏழாவது துடுப்பாட்ட வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். டெண்டுல்கர் மற்றும் டிராவிட் இதே சாதனையை இதற்கு முன் படைத்துள ளனர்.

ஆசியக் கிண்ண வரலாற்றில் அதிக ஓட்டங்களை எடுத்த இந்திய துடுப்பாட்ட (1042 ஓட்டங்கள்) என்ற சாதனையை படைத்துள்ளார்.

சர்வதேச இருபது -20 கிரிக்கெட்டில் அதிக முறை ஆட்டநாயகன் விருதை வென்றுள்ளார் கோலி. இதன் மூலம் ஆப்கான் வீரர் முகமது நபி சாதனையை சமன் செய்துள்ளார். இருவரும் 13 முறை ஆட்டநாயகன் விருதை வென்றுள்ளனர். (ஐ)

# நியூசிலாந்துடனான போட்டி; அவுஸ்திரேலியா அபார வெற்றி!



கெய்ர்ன்ஸ், செப். 10

நியூசிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் 113 ஓட்டங்கள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி தொடரை கைப்பற்றியது.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி, அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணி கள் இடையிலான 2ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி கெய்ர்ன்ஸ் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 195 ஓட்டங் கள் எடுத்தது. அதிகபட்சமாக ஸ்டீவ் ஸ்மித் 94 பந்துக ளில், ஒரு சிக்ஸர், 5 பௌண்ட்ரிகளுடன் 61 ஓட்டங்கள் சேர்த்தார். மிற்செல் ஸ்டார்க் 38, கிளென் மக்ஸ்வெல் 25, ஜோஸ் ஹசில்வூட் 23, ஆடம் ஸம்பா 16, அலெக்ஸ் காரே 12 ஓட்டங்கள் எடுத்தனர். ஒரு கட்டத்தில் அவுஸ் திரேலிய அணி 54 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறியது.

இந்தசூழ்நிலையில் ஸ்டீவ் ஸ்மித், பின்கள வீரர்களு டன் இணைந்து நிதானமாக விளையாடியதால் அவுஸ் திரேலிய அணியால் 195 ஓட்டங்களை எட்ட முடிந்தி ருந்தது.

நியூசிலாந்து அணி சார்பில் டிரெண்ட் போல்ட் 4, மேட் ஹென்றி 3 விக்கெட்கள் வீழ்த்தினர்.

196 ஓட்டங்கள் என்ற இலகு இலக்கை நோக்கித் துடுப் பெடுத்தாடிய நியூசிலாந்து அணியானது அடம் ஸம் பாவின் சுழற்பந்து வீச்சில் சிக்கி 33 ஓவர்களில் 82 ஓட் டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

அதிகபட்சமாக கேன் வில்லியம்சன் 17, மிற்செல் சாண்ட்னர் 16, பிரேஸ்வெல் 12, டேரில் மிற்செல் 10 ரன்கள் சேர்த்தனர். அவுஸ்திரேலிய அணிசார்பில் அடம் ஸம்பா 5 விக்கெட்களையும் மிற்செல் ஸ்டார்க், சீன் அபோட் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரை 2-0 என கைப்பற்றி யது. முதல் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி கண்டிருந்தது. கடைசி ஆட்டம் நாளை ஞாயிற்றுகிழமை நடை பெறுகிறது. (ஐ)

# ஐந்து மணி நேரம் நீடித்த போட்டி; சின்னரை வீழ்த்தினார் அல்கராஸ்!


நியூயோர்க், செப். 10

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரி வில் ஸ்பெயினின் கார்லோஸ் அல் கராஸ் 5 மணி நேரம் 15 நிமிடங்கள் போராடி ஜன்னிக் சின்னரை தோற் கடித்து அரையிறுதி சுற்றுக்கு முன் னேறினார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி சுற்றில் 3ஆம் நிலை வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ், 11ஆம் நிலை வீரரான இத்தாலியின் ஜன்னிக் சின்னரை எதிர்த்து விளையாடினார்.

5 மணி நேரம் 15 நிமிடங்கள் நடைபெற்ற இந்த போராட்டத்தில் கார்லோஸ் அல்கராஸ் 6-3, 6-7 (7-9), 6-7 (0-7), 7-5, 6-3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரையி றுதிக்கு முன்னேறினார்.

இதன் மூலம் அல்கராஸ் - ஜன் னிக் சின்னர் மோதிய ஆட்டம்



அமெரிக்க ஓப்பனின் 141 வருட வரலாற்றில் தாமதமாக முடிவ டைந்த ஆட்டம் என்ற சாதனையை படைத்துள்ளது. (ஐ)



## கரித்தாஸ்-வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் மரநடுகை நிகழ்வு

கொழும்பு, செப். 10

கரித்தாஸ்-வாழ்வுதயத்தின் சர்வமத செயற்றிட்டத்தின் கீழ் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், இயற்கை மட்டில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் மரநடுகை நிகழ்வானது நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாந்தை மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட வாமதேவ புர ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் கரித்தாஸ்-வாழ்வுதயத்தின் பதில் இயக்குநர் அருட்தந்தை விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்களான இந்து மதகுரு சத்தியானந்தா சர்மா குருக்கள், முஸ்லிம் மத குரு முஹமட் நிரோசன் ,கிராம அலுவலர், முன்பள்ளி சிறுவர்கள், சர்வமத குழு உறுப்பினர்கள் சர்வமதப் பிரிவின் பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர் .

தொடர்ந்து உரையாற்றிய கரித்தாஸ் வாழ்வுதயத்தின் பதில் இயக்குநர் கூறுகையில்-

இந்த மரநடுகை செயற்பாடானது நாம் இயற்கையை நேசிக்கும் ஒரு செயற்பாடாகும்.இந்த இயற்கை ஊடாகவே கடவுள் மனித குலத்துக்கு பல நன்மைகளை வழங்குகின்றார்.

தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தின்" தாக்கத்திற்கு மிக முக்கிய காரணிகளில் ஒன்றாக காடுகள் மரங்கள் அழிக்கப்பட்டமையே காரணமாகும் . ஆகவே அதன் தாக்கத்தை குறைப்பதற்கு மரநடுகை செயற்றிட்டத்தை நடைமுறைபடுத்துவது ஒரு சிறப்பம்சமாகும் .

இந்நிகழ்வினை வாமதேவ புரம் இந்து ஆலயத்தில் நடைமுறைபடுத்துவதானது ஒரு சமய நல்லிணக்கச் செயற்பாட்டை காட்டுவதோடு மக்கள் மத்தியில் ஒரு சிறந்த விழிப்புணர்வை வழங்குவதாகவும் அமைகின்றது- என்றார்.

அதனை தொடர்ந்து சர்வமதத் தலைவர்கள், சர்வ மதக் குழு உறுப்பினர்கள், கிராம அலுவலர் மரக்கன்றுகளை நாட்டினர். (அ)

# நாட்டில் மனித உரிமைகளை அரசு உறுதிப்படுத்தவில்லை

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 10

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதிய நிர்வாகம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் தண்டனையின்மையை முடிவுக் குக் கொண்டுவருவதற்கும் உறுதியளிக்கவில்லை என்பதை உணர்த்தியுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சுமத்தியுள்ளது.**

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் 37 இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.

அவர்களில் மூன்று பேர் கடுமையான உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் என குற்றம் சுமத்தப்பட்டவர்கள் என்று கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி சுட்டிக்காட்டியுள்ளார்.

பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன்,

லொஹான் ரத்வத்தை, சனத் நிஷாந்த ஆகியோர் மீதே இவ்வாறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், மோசமான அமைச்சு நியமனங்கள் மற்றும் அமைதியான எதிர்ப்புக்களுக்கு அதன் கடுமையான பிரதிபலிப்பு, இலங்கையின் உரிமைகள் நிலைமை வேகமாக வீழ்ச்சியடைந்து வருகின்றமை தொடர்பில், இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# சமூக பாதுகாப்பு வரிச் சட்டமூலத்தின் மூலம் 140 பில்லியன் ரூபாய் வருமானம் எதிர்பார்ப்பு

கொழும்பு, செப். 10

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரிச் சட்டமூலத்தின் மூலம் வருடத்திற்கு 140 பில்லியன் ரூபாய் வருமானத்தை பெறுவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் வருடாந்த வருமானம் 120 மில்லியனைத் தாண்டிய வர்கள் வரிக்கு உட்பட்டவர்கள் என்று பாராளுமன்ற தகவல் தொடர்புத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் 81 பெரும்பான்மை வாக்குகளால் நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரியானது 2022 வரவு-செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இது அரசாங்க வருவாயை அதிகரிக்கும் மற்றும் கொரோனா தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டதாக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பிரிட்டிஷ் வரலாற்றுக்கும் எமக்கும் இருந்த இறுதி பிணைப்பு அறுந்தது

## மகாராணியின் மறைவுக்கு மனோ இரங்கல்

கொழும்பு, செப். 10

"லிலிபட்" என செல்லமாக அழைக்கப்பட்ட எலிசபெத் மகாராணியார் மறைந்தார். தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களை பிரித்தானிய அரச குடும்பத்துக்கும், மக்களுக்கும், அரசுக்கும் தெரிவித்து கொள்கிறோம் என தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி தெரிவித்துள்ளார்.

மனோ எம்.பி. விடுத்துள்ள செய்தியில் மேலும் கூறியதாவது:

எமது ஞாபகத்தில் எலிசபெத் மகாராணியார் பிரிட்டிஷ் முடியாட்சியின் சின்னம். முடியாட்சி என்பது காலனியாதிக்கமாகி எம்மை ஆண்டது. அது அன்றைய யுகம். இன்று ஜனநாயக யுகம். இரண்டிலும் வாழ்ந்து பெருமை பெற்ற ஒரே பிரித்தானிய அரசி "லிலிபட்" என செல்லமாக அழைக்கப்பட்ட எலிசபெத் மகாராணியார் ஆவார்.

போர்த்துகேயர், ஒல்லாந்தர் ஆகியோர், இலங்கை தீவின் பகுதிகளை கைப்பற்றி ஆட்சி செய்து இருந்தாலும், முழு இலங்கை தீவையும் கைப்பற்றி ஒரே நாடாக்கியது, பிரிட்டிஷ் முடியாட்சிதான். அதன்படி அதுவரையில் வடக்கில் இருந்த தமிழரசாட்சி நாட்டையும் இணைத்து, ஈழத்தமிழர் இறைமையையும் இலங்கை என்ற ஒரே நாட்டு வரையறைக்குள் 1833ஆம் வருடம் கொண்டு வந்ததும் பிரிட்டிஷ் முடியாட்சிதான்.

அதேபோல் 1823ஆம் வருடம் முதல், இந்திய வம்சாவளி மலையக தமிழரை தமிழகத்து தென் மாவட்டங்களிலிருந்து, இலங்கைக்கு கொண்டு வந்து, வளம் கொழிக்கும் பெருந் தோட்டங்களை அமைத்து, இலங்கையை செல்வம் கொழிக்கும் தேயிலை ஏற்றுமதி நாடாக்கியதும் பிரிட்டிஷ் முடியாட்சி தான்.

அதன் முன்னரே இலங்கை வந்து ஆண்ட, இலங்கை தீவின் அதிகாரபூர்வ கடைசி மன்னனான இந்திய வம்சாவளி நாயக்க தமிழன் ராஜசிங்கனை 1815 இல், தோற்கடித்ததும், பிரிட்டிஷ் முடியாட்சிதான்.

செல்வம் கொழிக்கும் தேயிலை ஏற்றுமதி நாடாக இலங்கை மாறியதால், அதற்கு அவசியமான வீதி, ரயில் சாலை, துறைமுகம், நகர அமைப்பு, அரச பணி சேவை ஆகிய உள்நாட்டு கட்டமைப்புகளை ஏற்படுத்தியதும் பிரிட்டிஷ் முடியாட்சிதான்.

இத்தகைய பற்பல வரலாற்று நடப்புகளுக்கு அதிகாரபூர்வ தலைமை பொறுப்பு கொண்ட எலிசபெத் மகாராணியார், 1823, 1833 வருடங்களில் நடந்த நிகழ்வுகளால் இலங்கையில் இன்றுவரை தீர்க்கப்படாமல் கொழுந்து விட்டு எரியும் தீ அணையுமுன் மறைந்துவிட்டாரே என தோன்றுகிறது. ஒப்பீட்டு வயதில் குறைந்தவரான புதிய பிரிட்டிஷ் மன்னர் சாள்ஸ், இலங்கை விவகாரங்களில் பிரித்தானியாவுக்கு இருக்கின்ற தார்மீக பொறுப்புகளை நிறைவேற்ற அக்கறை கொள்வார் என நம்புவோம்-என்றுள்ளது. (அ)




## சர்வதேச எழுத்தறிவு நாளை முன்னிட்டு திருமலையில் விழிப்புணர்வுப் பேரணி

திருமலை, செப். 10

சர்வதேச எழுத்தறிவு நாளை முன்னிட்டு திருகோணமலை கல்வி வலயத்தின் விழிப்புணர்வுப் பேரணி நேற்று திருக்கோணமலையில் நடைபெற்றது.

இன்றைய நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ளத் தக்க வகையில் நிலைபேரான கல்வி அபிவிருத்தியினை நோக்கிய மாணவர் சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதன் பொருட்டு சர்வதேச எழுத்தறிவு நாளை முன்னிட்டு திருகோணமலைக் கல்வி வலய முறைசாராப் பிரிவின் ஏற்பாட்டில் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. சிவானந்தம் சிறீதரன் அவர்களது தலைமையில் இந்த பேரணி இடம்பெற்றது.

இவ் விழிப்புணர்வுப் பேரணியில் மாதுமை அம்பாள் வித்தியாலயம், செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம் மற்றும் பாரதி தமிழ் வித்தியாலயம் போன்ற பாடசாலைகள் அடங்கலாக ஊர்வலமும், ஒன்று கூடலும் நடைபெற்று எழுத்தறிவின் அவசியத்தை வலியுறுத்தும் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

## திருமலையை...

டும். இதேநேரம், அவர் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்குள் மீள் பிரவேசம் செய்வதை கூட்டமைப்பிலுள்ள மூன்று அங்கத்துவ கட்சிகளும் உறுதிப்படுத்த வேண்டும்.

- இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா.

ஈழத்தின் தொன்ம ஆலயமான திருக்கோணேஸ்வரம் ஆலயக் காணி சுற்றுலா அபிவிருத்தி என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்படுவதாக ஈழநாடு நேற்று தகவல் வெளியிட்டிருந்தது. இது தொடர்பிலேயே நேற்று நீண்ட ஓர் அறிக்கையை தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் வெளியிட்டுள்ளார். அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு,

தமிழர் தாயகத்தின் தலைநகர் என்று உணர்வுபூர்வமாக கருதப்பட்டு வந்திருக்கும் திருகோணமலையில் அமைந்துள்ள வரலாற்றுத் தொன்மை மிகு கோணேசர் ஆலயத்தின் சுற்றாடலில் உள்ள அதன் காணிகளை ஆக்கிரமித்து கையகப்படுத்திட எடுக்கப்படும் நடவடிக்கை பற்றிய செய்திகள் அபாய அறிவிப்பாக அமைந்துள்ளன.

பூகோள - அரசியல் ரீதியாக, கேந்திர முக்கியத்துவம் கொண்ட திருகோணமலையை, கூடிய விரைவில் ஒட்டு மொத்தமாக, தனது பிடிக்குள் கொண்டு வரும் நோக்கில் சிங்கள பேரினவாதம் குறிவைத்து செயல்பட்டு வருகின்றது.

யுத்தத்தின் போது ஏற்பட்ட இடப்பெயர்வினால் வெறிச்சோடிப் போன பழந் தமிழ்க் கிராமங்களும், அவர்களின் வயல் நிலங்களும் ஆக்கிரமிப்பாளர்களின் கையிலேயே பெருமளவில் தொடர்ந்து இருந்து வருகின்றன. இந்நிலையில், தொல்பொருள் திணைக்களத்தின் ஊடாக இதுவரையில் எடுக்கப்பட்டு வந்துள்ள நடவடிக்கைகளில் இப்போது சுற்றுலாத்துறை அமைச்சும் இணைந்துள்ளது. இந்தக் கூட்டு முயற்சியே கோணேசர் ஆலயக் காணிகளை அபகரிக்க முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்கு எதிராக, உரிய நேரத்தில் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் குரல் எழுப்புவதற்குக் கூட நாதியற்ற நிலையே அந்த மாவட்டத் தமிழ் மக்களின் தலைவிதியாக உள்ளது. திருகோணமலை மாவட்டத்தின் ஒரே ஒரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன், தனது தளர்வுற்ற உடல் நிலை காரணமாக களத்தில் நிற்க முடியாமல் உள்ளார்.

ஆனால், இந்தக் காரணத்துக்காக திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் அரசியல் அநாதைகள் ஆகிவிட முடியாது. அதே நேரத்தில் பல்வேறு அரசியல் காரணங்களுக்காக கூட்டமைப்பின் தலைவர் பாராளுமன்றத்தில் நீடிக்க வேண்டிய அவசியத்தையும் மறுத்துரைக்க முடியாது. எனவே, நடைமுறையில் உள்ள பாராளுமன்ற தேர்தல் ஏற்பாடுகளை பயன்படுத்தி இந்த இரண்டு தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

தமது மாவட்டத்தில் நிலைகொண்டு உடனுக்குடன் செயல்படக் கூடிய பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொள்வதற்கு கூட்டமைப்புக்கு வாக்களித்து மயிரிழையில் அதன் வேட்பாளரை வெற்றி பெறச் செய்த திருகோணமலை மாவட்ட தமிழர்களுக்கு முழு உரிமையும் உண்டு என்பதை தமிழ்த் தேசியத்தின் பெயரால் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் உள்ள ஒருவருக்கு சம்பந்தன் வழி விடுவதன் மூலமும் அதே நேரத்தில் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் ஊடாக அவர் பாராளுமன்றத்துக்குள் மீள் பிரவேசம் செய்வதை கூட்டமைப்பின் மூன்று அங்கத்துவக் கட்சிகளும் முன் கூட்டியே உறுதிப்படுத்துவதன் மூலமும் இந்த விடயங்களை செயல்படுத்த முடியும். இதனால், அம்பாறை மாவட்டத்துக்கு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இழக்கப்படலாம். ஆனால், திருகோணமலை காப்பாற்றப்பட வேண்டுமானால் விட்டுக்கொடுப்புக்கள் தவிர்க்கப்பட முடியாதவை - என்றுள்ளது. (ஐ)

## நட்புறவில்...

யடைகின்றோம் - என்று இலங்கைக்கான சீனத்தூதுவர் கீ  சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் உதவித் திட்டத்தை கடந்த 6ஆம் திகதி வழங்கி வைத்த அவர் அங்கு உரையாற்றுகையில்,

“கடந்த மூன்று மாத காலத்தில் இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் பல்வேறு முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இருப்பினும் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாரம்பரிய நட்புறவிலும் பொதுவான அபிவிருத்தி தொடர்பான அக்கறையிலும் எவ்வித மாற்றங்களும் ஏற்படாமை குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

இரு நாடுகளுக்கும் - இரு நாட்டு மக்களுக்கும் இடையிலான பரஸ்பர புரிந்துணர்வு, கௌரவம் மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றில் மாற்றம் ஏற்படவில்லை. மக்கள் மனதில் இவ்விருதரப்பு நட்புறவு மிகவும் ஆழமாகப் பதிந்துள்ளமையே அதற்குக் காரணமாகும்“ என்று சுட்டிக் காட்டினார். (ஐ)

## கோட்டாபயவின்...

சீனன்குடா எண்ணெய் தாங்கி பண்ணையை கூட்டாக அபிவிருத்தி செய்வதற்காக லங்கா ஐ. ஓ. சி. நிறுவனத்துடன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்ள அதிகாரம் வழங்கிய அமைச்சரவை பத்திரத்தின் சட்டபூர்வமான தன்மையை சவாலுக்கு உட்படுத்தி இந்த மனுக்களை எல்லே குணவன்ச தேரர், பெங்கமுவே நாலக தேரர் மற்றும் வக்முல்லே உதித்த தேரர் ஆகியோர் தாக்கல் செய்துள்ளனர்.

இந்தநிலையில், நேற்று மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மனுக்களில் திருத்தத்துக்கு நீதிமன்றத்தின் அனுமதியை கோரினார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை வகிக்காததால் அவரை தனிப்பட்ட முறையில் இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்க்க நீதிமன்றில் அனுமதி கோரினார். இதற்கு உடன்பட்ட நீதிமன்றம் கோட்டாபயவை பிரதிவாதியாக இணைக்க இணக்கம் வெளியிட்டது.

இந்த மனுக்கள்மீதான விசாரணை எதிர்வரும் நவம்பர் 11ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியை விட்டு விலகிய பின்னர் அவர் மீதான வழக்குகளில் முதல் வழக்காக இது பதிவாகியுள்ளது.

இதேவேளை, பதவி விலகிய கோட்டாபய ராஜபக்ஷ பல வழக்குகளை எதிர்கொள்ள நேரிடும் என்று முன்னர் தகவல்கள் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அதிவேகத்தால்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நிலையில் இளைஞர் உயிரிழந்தார்.

இளைஞரின் உயிரிழப்புக்கு அதிவேகமாக அவர் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றதால் ஏற்பட்ட விபத்தே காரணம் என்று யாழ். போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் தெரிவித்தார். (ஐ-3)

## 19ஆம் திகதி...

மகாராணியாக மகுடம் சூடிய இரண்டாம் எலிசபெத் 70 ஆண்டுகள் ஆட்சி செய்திருந்தார்.

இலங்கையும் 1975ஆம் ஆண்டு முதல் 1947ஆம் ஆண்டுவரை முடிக்குரிய குடியேற்ற நாடாக பிரித்தானியாவின் ஆட்சிக்கு கீழ் இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மகிந்த தலைமையில் புதிய கூட்டணி வரும்!

கொழும்பு, செப். 10

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் புதிய கூட்டணி உருவாக்கப்படுமென முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

வன்முறையை முன்னெடுப்பவர்கள், சமூக ஊடகங்களில் வன்முறையை தூண்டுபவர்கள் மீது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சட்டத்தை பிரயோகித்திருந்தால், இன்று இதனை விட நிலைமை வேறு விதமாக இருந்திருக்கும். எனினும், ரணில் விக்ரமசிங்க அதனை மேற்கொள்வதையிட்டு மகிழ்ச்சியடைவதாக நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தமது அரசியல் கட்சியின் பலம் தாம் எதிர்பார்க்காத வகையில் அழிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட நாமல் ராஜபக்ஷ, அமைப்பு முறைமையை மாற்றுவதாகக் கூறி ஆட்களை மாற்றியதுதான் தமது கட்சி செய்த தவறு எனவும் குறிப்பிட்டார்.

நாட்டின் பெற்றோரும் பிள்ளைகளும் ஒன்றிணைந்தால், அமைப்பு முறையில் மாற்றம் கண்ட நாட்டினை கட்டியெழுப்ப முடியும் என அவர் கூறினார்.

அவ்வாறான யுகத்திற்கு நாட்டைக் கொண்டு செல்வதற்கு அவசியமான தலைமைத்துவத்தை பொதுஜன பெரமுன என்ற ரீதியில் பெற்றுத் தருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# சார்க் வெளியுறவு அமைச்சர்களை இலங்கைக்கு அழைக்க தீர்மானம்!

கொழும்பு, செப். 10

2023 பெப்ரவரி 04 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள இலங்கையின் 75ஆவது சுதந்திர தின நிகழ்வுக்கு, சார்க் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை சிறப்பு விருந்தினர்களாக அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

75 ஆவது சுதந்திர தின விழா கொண்டாட்ட ஏற்பாட்டுக் குழுவின் முதலாவது கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில், சார்க் வெளிவிவகார அமைச்சர்களை அழைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

## எதிர்காலத்தில்...

ழீழ  விடுதலை இயக்கத்தின் உறுப்பினரின் மரணத்தாலேயே ஓர் உறுப்பினருக்கான வெற்றிடம் ஏற்பட்டது.  அந்த இடத்தை நிரப்புகின்ற தார்மீக உரிமை தமிழீழ விடுதலை இயக்கத்துக்கே  இருந்தமையை தாங்கள் நன்கு அறிவீர்கள்.

“மேற்படி வெற்றிடத்துக்கு தங்கள் கட்சியால் தொடர்ச்சியான கோரிக்கை முன் வைத்ததன் அடிப்படையில் தங்கள் கட்சி உறுப்பினர் மயூரனுக்கு நகரசபை உறுப்பினர் பதவி வழங்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் வல்வெட்டித்துறை நகரசபை தவிசாளர்  பதவி ரெலோவுக்கே ஒதுக்கப்பட்டிருந்தது.  ரெலோவின் தவிசாளராக இருந்த கருணானந்த ராஜா மரணித்த பின்பு தவிசாளர் தெரிவுகளில் குழப்பங்கள் ஏற்பட்டன.

“கடந்த, ஓகஸ்ட் 23 அன்று நடந்து முடிந்த வல்வெட்டித் துறை நகர சபைத் தவிசாளர் தெரிவிலே, தமிழீழ விடுதலை இயக்கத்தால் பிரேரிக்கப்பட்டவருக்கே வெற்றி வாய்ப்பு உறுதியாகி இருந்த நிலையில் தங்களால் நியமிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட நபர் தவிசாளர் தெரிவில் வாக்களிப்புக்கு சமுகமளிக்காதலால் எமது கட்சி ஒரு வாக்கால் வெற்றி வாய்ப்பை தவறவிட்டமை மிகவும் வேதனையான விடயம்.

“ஆகையால், தங்களின் கோரிக்கையின் அடிப்படையிலேயே அவருக்கு எமது கட்சி சார்பில் பதவி வழங்கப்பட்டதுஎன்பதை நினைவுறுத்தி உடனடியாக நடைமுறைக்கு வரும் வண்ணம், அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை தாங்கள் முன்னெடுக்க வேண்டும் என்றும், அவருடைய பதவி நிலையை வறிதாக்கி தேர்தல் ஆணையத்துக்குக் கடிதம் அனுப்ப வேண்டும் எனவும் எமது கட்சியால் கோரிக்கை முன் வைக்கிறோம்.

“எதிர்காலத்தில் கூட்டமைப்பு,  கட்டுப்பாட்டுடனும் சரியான நிர்வாக அமைப்புடனும் செயல்படுவதற்கு இந்த நடவடிக்கை மிகவும் அவசியமானது என்று எமது கட்சி வழமைபோல கருதுகின்றது.

“ஏனைய பல உள்ளூராட்சி மன்றங்களிலும்  தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கு இடம் கொடுக்காமல் கூட்டமைப்பு முடிவுகளுக்கு கட்டுப்பட்டே எமது கட்சி உறுப்பினர்களும் தங்கள் கட்சியோடு ஒன்றிணைந்து இன்றுவரை செயல்பட்டு வருகிறார்கள் என்பதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

“கடந்த நல்லூர் பிரதேச சபை தவிசாளர் தெரிவிலும் இதே போன்ற சம்பவம் நடைபெற்றதை நினைவுபடுத்தவிரும்புகிறோம். எதிர்காலங்களில் இந்த ஒழுங்கு முறை சீர்குலையாமல் இருப்பதற்கு உடனடியாக இந்த நடவடிக்கையை நீங்கள் முன்னெடுப்பீர்கள் என்று நம்புகிறோம்” - என்றுள்ளது. (ஐ-6)

## அமெரிக்கா...

எதிர்ப்புகளை தொடர்ந்து கடந்த ஜூன் 9ஆம் திகதி நிதி அமைச்சர் பதவியிலிருந்து பஸில் ராஜபக்ஷ விலகினார்.

இந்நிலையில், அவர் வெளிநாடு செல்வதற்கு பயணத் தடை விதிக்கப்பட்டது. இந்நிலையில், அவரின் தடையை தொடர்ச்சியாக நீதிமன்றம் நீடித்து வந்தது.

இந்நிலையில், அண்மையில் உயர்நீதிமன்றம் 2023 ஜனவரி 15ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் வெளிநாடு செல்ல அனுமதியளித்தது. மருத்துவ சிகிச்சை உள்ளிட்ட தனிப்பட்ட காரணங்களால் பஸில் ராஜபக்ஷ அமெரிக்கா செல்ல பிரதம நீதியரசர் உட்பட ஐந்து நீதியரசர்கள் கொண்ட அமர்வு அவருக்கு அனுமதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழிலிருந்து...

மையிலான அணியினர் குறித்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தினைப் பயன்படுத்தி தொடர்ந்தும் கைது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் சூழலில் குறித்த போராட்டப் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்று முற்பகல் 10 மணியளவில் மாவிட்டபுரத்தில் தொடங்கும் குறித்த பேரணி இலங்கையின் 25 மாவட்டங்களையும் சென்றடைந்து இறுதியாக அம்பாந்தோட்டையில் நிறைவடையும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

போராட்டம் ஒரு நாளைக்கு ஒரு மாவட்டத்திற்குச் சென்றடையும் என்ற அடிப்படையில் 25 நாட்கள் தொடரும் என்று எதிர்பார்ப்பதாகவம் அவர்கள் கூறினர். (அ)

ஈழநாடு
Eelanadu

# சமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 18 பேருக்கு ஒருங்கிணைப்புக் குழு தலைவர் பதவி

கொழும்பு, செப். 10

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களாக பிரதமர் தினேஷ் குணவர்தனவிடமிருந்து 18 பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமனக் கடிதங்களைப் பெற்றுள்ளனர்.

ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பி.எம். சாகர காரியவசம் ஆகியோரும் இந்த நிகழ்வில் இணைந்துகொண்டனர்.

இதன்படி, 18 மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கான புதிய தலைவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நியமனக் கடிதங்களைப் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் விபரம்.

கொழும்பு - பிரதீப் உடுகொட

கம்பஹா - சஹான் பிரதீப் விதான, களுத்துறை - சஞ்சீவ எதிரிமான்ன, காலி - சம்பத் அத்துக்கோரள, மாத்தறை - நிபுன ரணவக்க, அம்பாந்தோட்டை - சமல் ராஜபக்ஷ, குருநாகல் - சமந்திர ஹேரத், புத்தளம் - சிந்தக மாயாதுன்னே, அனுராதபுரம் - எச்.நந்தசேன, கண்டி - குணதிலக ராஜபக்ஷ, மாத்தளை - நாலக பண்டார கோட்டேகொட, நுவரெலியா - எஸ்.பி. திஸாநாயக்க, பதுளை - சுதர்சன் தெனிபிட்டிய, மொனராகலை - குமாரசிறி ரத்நாயக்க இரத்தினபுரி - அகில எல்லாவல கேகாலை - ராஜிகா விக்கிரமசிங்க, அம்பாறை- டி. வீரசிங்க,திருகோணமலை - கபில அத்துக்கோரள. (அ)



# யாழ். ஐந்து சந்தியில் சிறுவர்களை பணிக்கு அமர்த்திய தனியார் விடுதிக்கு சீல் வைப்பு!

யாழ்ப்பாணம், செப். 10

யாழ்ப்பாணம் ஐந்துச் சந்திப் பகுதியில் தனியார் விடுதி ஒன்றை நடத்தி, அங்கு வயதுக்கு குறைந்த சிறுவர்களைப் பணிக்கு அமர்த்தி, யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் ஊதுபத்தி விற்பனையில் ஈடுபடச் செய்த காரணமாக இருந்த விடுதி நேற்று சீல் வைத்து இழுத்து மூடப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதிவான் ஆனந்தராஜா இந்த உத்தரவை பிறப்பித்தார்.

புத்தளம் பகுதியில் இருந்து சிறுவர்களை அழைத்து வந்து அவர்களிடம் ஊதுபத்திகளை வழங்கி விற்பனையில் ஈடுபடுத்தியதாக பூட்டுக் கடை நாதன் என்பவருக்கு சொந்தமான நாதன் விடுதியே நேற்று சீல் வைத்து மூடப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸாரினால் கடந்த மாதம் குறித்த விடுதியில் இருந்து ஏழு சிறு பெண் பிள்ளைகள், மூன்று ஆண் பிள்ளைகள் உட்பட 11 பேர் யாழ்ப்பாணம் சிறுவர் பிரிவு பொலிஸாரினால் மீட்கப்பட்டிருந்தனர்.

இது தொடர்பான வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, நீதவான் குறித்த விடுதியினை சீல் வைத்து மூடுமாறு நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கு கட்டளை பிறப்பித்தார். (அ)



# வாழ்வாதார உதவியும் இழப்பீடும் வழங்குக!

## நிந்தவூர் மீனவர்கள் கோரிக்கை

அம்பாறை, செப். 10

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர்ப் பிரதேசத்தில் உக்கிரமடைந்துள்ள கடலரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள கரைவலை மீன்பிடியாளர்களுக்கு வாழ்வாதார உதவிகளும், இழப்பீடும் வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடலரிப்பினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிந்தவூரின் தென்பகுதி கரைவலை மீன்பிடி சங்கங்கள், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் மேற்படி கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

முன்னெப்போதுமில்லாத வகையில் ஏற்பட்டுள்ள உக்கிர கடலரிப்பினால், கடல் மீன்பிடியில் ஈடுபட முடியாதவாறு பாதிப்படைந்து தமது வாழ்வாதாத்தை இழந்துள்ள கரைவலை மீன்பிடியாளர்களின் மீன்பிடி உபகரணங்கள், மற்றும் உடமைகளும் பாதிக்கப்பட்டு நிர்க்கதி நிலைக்கு உட்பட்டுள்ளதாக மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மீனவர் ஓய்வு மண்டபம், மற்றும் மீனவர் கட்டடங்கள் என்பனவும், மீன்படி உபகரணங்களைப் பாதுகாப்பாக வைத்து வந்த மீனவவாடிகளும் கடலரிப்பால்காவு கொள்ளப்பட்டுள்ள அதேவேளை,

குறித்த கவைலை மீன்பிடித்தொழில் மூலமே தினமும் தமது ஜீவனோபாயத்தை முன்னெடுத்துவந்த கரைவலை மீனவத்தொழிலாளர்கள் தொழில் இழந்து பரிதவிக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளதாக கரைவலை மீன்பிடிச்சங்கங்கள் இந்த மகஜர் மூலம் அமைச்சரின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளன.

எனவே வாழ்வாதார உதவிக்கான நிவாரணம் வழங்குவதுடன், அழிந்துபோன மீனவ உபகரணங்களுக்கான இழப்பீடுகளை வழங்க முன்வருமாறும் மீனவர்கள் கோரியுள்ளனர்.

ஒலுவில் துறைமுக நிர்மாணசாத்தியக் கூற்று அறிக்கைகள் புறக்கணிக்கப்பட்டதன் விளைவாகவே அயல் கிராமமான நிந்தவூர் மிக மோசமான கடலரிப்புக் குட்பட்டுவருவதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-06)

# அரிசி, சீனி மற்றும் பருப்பின் விலை சதொசவில் குறைப்பு!

கொழும்பு, செப். 10

சதொசவில் விற்பனை செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை அரிசி, சிவப்பு பருப்பு, வெள்ளை சீனி மற்றும் உளுந்து ஆகியவற்றின் விலைகளை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சதொச தலைவர் தெரிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை முதல் இந்த விலைகள் குறைக்கப்படும் என சதொச தலைவர் மேலும் கூறினார்.

அதன்படி, 210 ரூபாயாக இருந்த இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ வெள்ளை அரிசியின் விலை 185 ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 200 ரூபாயாக இருந்த இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளை நாடு கிலோ ஒன்றின் விலை 194 ரூபாயாகவும் சிவப்பு பருப்பு ஒரு கிலோ 135 ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளது. (அ)

# வெளிநாடுகளுக்கு பறக்கும் இலங்கையர்கள் அதிகரிப்பு

கொழும்பு, செப். 10

வெளிநாட்டு வேலைகளுக்கான இலங்கையர்களின் தேவை வேகமாக அதிகரித்து வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் மாத்திரம் இதுவரையில் 208,772 இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைகளுக்காக வெளியேறியுள்ளதாக குறித்த பணியகம் பிரதிப் பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர்களில் பெரும்பாலோர் ஆண்கள் என்றும், அவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து இருபத்தி ஆறாயிரத்திற்கு மேல் என்றும் அவர் கூறினார். (அ)

# விவசாயிகளின் கோரிக்கைகளை விதைப்பிற்கு முன் நிறைவேற்றுக!

## இரா.துரைரெத்தினம் வலியுறுத்தல்

அம்பாறை, செப். 10

“மாட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப் படவிரக்கும் பெரும் போக விவசாயச் செய்கைக்கான விதைப்பிற்கு முன்னர் விவ சாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற ஆவன செய்யப் படுவதுடன், விவசாயிகளுக் கான விவசாய உள்ளீடுகள் வழங்கலும் உறுதிப்படுத் தப்பட வேண்டும்”

-இவ்வாறு, முன்னாள் கிழக்க மாகாண சபை உறுப்பினர் (ஈ.பி.ஆர்.எல்.எப்) ப.ம, இரா.துரைரெத்தினம் வலியு றுத்தியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட் டத்தில் பெரும்போக நெற் செய்கை மேற்கொள்வது தொடர்பிலும், சிறுபோக செய்கையின் போதும், அறுவடையின் போதும் விவசாயிகள் எதிர்கொண்ட நெருக்கடிகள், அழிவுகள் தொடர்பிலும் கவலை தெரிவித்து அவர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இந்த அறிக்கையிலேயே அவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார். (அ-06)

# நல்லிணக்கம், மதசகவாழ்வு குறித்து திருகோணமலையில் செயலமர்வு



திருமலை, செப். 10

தேசிய சமாதான பேரவையின் அனுசரணையுடன் சேர்விங் ஹியூமானிட்டி பவுன்டேசன் கிண்ணியா அமைப்பினரின் ஒருங்கிணைப்பில் பிரதேச சர்வ மதக் குழுவினருக்கு மத சகவாழ்வு, நல்லிணக்கம் மற்றும் பன்மைத்துவம் தொடர்பான செயலமர்வொன்று திருகோணமலை கிரீன் கார்டன் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நீடித்து நிலைத்திருக்கக்கூடிய சமாதானம், இன ஐக்கியம், சகவாழ்வு மற்றும் பன்மைத்துவம் போன்றவற்றைக் கட்டியெழுப்புவதற்கான பல்வேறு செயற்திட்டங்களையும், பயிற்சிகளையும் தேசிய சமாதான பேரவை பிரதேச மட்டங்களில் மேற்கொண்டு வருகிறது.

அவ்வாறான செயற்றிட்டங்களில் ஒன்றான மத சகவாழ்வுக்கான முன்னெடுப்பு எனும் இச்செயற்திட்டத்தில் சர்வமத குழுவின் நோக்கு, அதன் இலக்கு, சமூக அங்கீகாரம், உள்ளக ஒற்றுமை, குழுச் செயற்பாடு மற்றும் பெறுபேறு தொடர்பில் விரிவான விளக்கமளிக்கப்பட்டதுடன் பங்கு பற்றுனர்களுக்கிடையிலான குழுச் செயற்பாடுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வளவாளராக சிசிர ஆரியவங்ச, தேசிய சமாதானப் பேரவையின் சிரேஸ்ட நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் எம்.யூ. மதனி உவைஸ், விஜயகாந்த், திருமதி. ஜெனி (மொழிபெயர்ப்பாளர்), சேர்விங் ஹியூமானிட்டி பவுன்டேசனின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷிக் அலாப்தீன் மற்றும் நிறைவேற்று குழு உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், இளைஞர் கழக உறுப்பினர்கள், இளைஞர் மதத் தலைவர்கள், பெண்கள் அமைப்பின் இளைஞர் உறுப்பினர்கள், சமூகமட்ட செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.09.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி
07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : WEEK END MOVIE
4.30 மணி : மனிதனின் மறுபக்கம்
5.00 மணி : அந்தி மந்தாரை-நேரலை
6.00 மணி : எதுசரி எதுபிழை-தற்கொலை-சொக்க தங்கம்



**இரவு**
7.00 மணி : நமக்காக நாம் வீட்டுத்தோட்டம்



7.30 மணி: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி: டான் பட்டிமன்றம்



10.00 மணி : நெற்றிக்கண்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**சிவன் ஒளி / ஓம் நிலி**

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்களும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு